Registered as a Newspaper

பாரதி கல்வி நிலையம்
சித்தங்கேணி
A/L 89, 90
கலை, வர்த்தகம்
Economics - சின்னத்தம்பி
Accounts - யோகராஜா
Commerce - ரட்ணம்-
Logic - சந்திரராஜா
ஆரம்பம்
12 9- 88
திங்கள் பிற்பகல்
3. 00 மணி

# உதயன்

விலை ரூ 2/-

பாரதி கல்வி நிலையம்
சித்தங்கேணி
A/L 89, 90
J. S. R. மகேஸ்
CHEMISTRY
ஆரம்பம்: 16- 8- 88
Fri – 3 மணி
S. M. R. சத்தியசீலன்
PHYSICS
ஆரம்பம்:
17-9-88 Sat. 11. 00 A.m
ஞானி
Pure & Applied - Maths
ஆரம்பம்: 17-9-88 9.00 A.m

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஆவணி மீ 24 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹர்ரம் பிறை 26 ( 09 - 09 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 179

துப்பாக்கிப் பிரயோகத்தின் மத்தியிலும்

# புதுக்குடியிருப்பு மக்கள் தடையை மீறி ஊர்வலம்

## ‘தேர்தல் வேண்டாம்’ உட்பட 5 அம்ச மகஜர் கையளிப்பு

புதுக்குடியிருப்பு. செப் 9

ஆண்கள், பெண்கள், மாணவர்கள் உட்படச் சுமார் நாலாயிரம் பேர், தடையை மீறியும், துப்பாக்கிப் பிரயோகத்தின் மத்தியிலும் புதுக்குடியிருப்பில் ஊர்வலம் சென்றனர்.

முன்னர் இரு தடவைகள் முயன்றும் இயலாமற் போன ஊர்வலத்தை அன்று நடத்தி, ஐந்து அம்சக் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் இந்திய அமைதிப் படை அதிகாரிகளிடம் அவர்கள் கையளித்தனர்.

★ தமிழ்ப் பிரதேசங்களில் நிரந்தர அமைதி கிட்டும்வரை தேர்தல் வேண்டாம்.

★ யுத்த நிறுத்தம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும்.

★ வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற, இடம்பெறுகின்ற அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை வாபஸ் பெறுதலும், தடுத்து நிறுத்துதலும்.

★ வடக்கு கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைத்தலும். பிரகடனப்படுத்துதலும்.

★ தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்தலும், புனர்வாழ்வு அளித்தலும்.

மேற்கண்ட ஐந்து கோரிக்கைகளையும் அடக்கிய மகஜர் ஒன்றினை மக்கள் சார்பில் புதுக்குடியிருப்பு பிரசைகள் குழுவும், அலையர் முன்னணியும் அமைதிப்படை அதிகாரிகளிடம் ஊர்வலமாகச் சென்று கையளிக்க விரும்பினர்.

அதுபோலவே–

கடந்த ஒரு வருடகாலமாக புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் இந்திய அமைதிப் படையினர் முகாமிட்டுள்ளதால் மாணவர் கஷ்டமுறுகின்றனர். வேறு பாடசாலையில் மர நிழல்களிலும் கொட்டகைகளிலும் பயிலவேண்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)



## நல்லூரில் இன்று தேர்

யாழ்ப்பாணம், செப்டம்பர் 9

சரித்திர பிரசித்தி பெற்ற நல்லூர்க்கந்தசுவாமி கோவில் இரதோற்சவம் இன்று நடைபெறுகிறது.

காலை 7 மணிக்கு முருகப்பெருமான் சித்திரத் தேரில் பவனி வந்து பக்த கோடிகளுக்கு தரிசனம் கொடுப்பார்.

முருகன் தேரேறி வரும் அற்புதக் காட்சியைக் காண ஆயிரக்கணக்கான பக்தர்கள் நல்லூரில் கூடுவர்.

தேர்த்திருவிழாவை முன்னிட்டு குடாநாட்டின் சகல பாதைகளுக்குமான விசேட போக்குவரத்துச் சேவைகள் ஏற்பாடாகி உள்ளன. (ஒ-10)

**ஆறு பக்கங்கள் கொண்ட மூவர்ணச் சிறப்பிதழ் இணைக்கப்பட்டுள்ளது**

சர்பந்தன் சொல்கிறார்:

## தீர்வு எதுவானாலும் செயற்படுத்துவதற்கு யுத்த நிறுத்தம் தேவை

கொழும்பு. செப் 9

எந்தத் தீர்வையும் முழுமையாக முன் எடுத்துச் செல்ல வேண்டும் என்றால் முதலில் யுத்த நிறுத்தம் ஏற்பட வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உப தலைவரும் திருகோணமலை முன்னாள் எம்பியுமான திரு. இரா சம்பந்தன் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அமைதி திரும்ப வேண்டும் இதற்கு யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னரே எந்த வித முன்னேற்றங்களையும் முழுமையான முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இந்தியத் தூதுவர் டிக்ஸிற்றுடன் மேலும் பேச்சுக்களை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்,

இப்படி திரு. சம்பந்தன் தெரிவித்தார். (ஒ-எ)

## பூஸாவிலிருந்து மேலும் மூவர் விடுதலை

வடமராட்சி செப் 9

சட்டுநாயக்கா விமான நிலையக் குண்டு வெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் எஞ்சியிருந்த நான்குபேரில் மூவர் கடந்த புதன்கிழமை பூஸாவிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

1986 ஆம் ஆண்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பு பகுதியில் நேற்றுக் கடும் சோதனை

யாழ்ப்பாணம் செப் 9

பண்டத்தரிப்பு, சுழிபுரம், சங்கானை, சண்டிலிப்பாய் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டது.

புதன்கிழமையன்று பண்டத்தரிப்பு சந்தையில் இரண்டு இந்தியப் படை ஜவான்கள் கொல்லப்பட்டதை அடுத்தே நேற்று ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

சோதனை நடவடிக்கையின்போது குறிப்பிட்ட வயதெல்லையில உள்ள இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்து வரப்பட்டு பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியில் தலையாட்டி முன் நிறுத்தப்பட்டனர்.

சில இளைஞர்களை மேல் விசாரணைக்காகப் படையினர் அழைத்துச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

இதே வேளை பிற்பகல் அளவில் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டதாக அறியவருகிறது (ஒ-10-)

ஏப். 16 இல் தாயகம் திரும்பியவர்கள்

## நடேஸ்வராக் கல்லூரியில் நாளை பார்சல்களை பெறலாம்

யாழ்ப்பாணம்,செப் 9

கடந்த ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்களுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தால் வழங்கப்படும் பார்சல்கள் நாளை 10 ஆம் திகதி (சனிக்கிழமை) வழங்கப்படும்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் காலை 9.30 மணியிலிருந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்தப் பார்சல்கள் வழங்கப்படும்.

கடந்த மாதம் (ஆகஸ்ட்) 27ஆம் திகதி நாடு திரும்பிய அகதிகளுக்கு மேற்படி பார்சல்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரஸ்தாப கல்லூரியில் வழங்கப்படும்.

இந்திய- இலங்கை அரசுகளினால் வழங்கப்பட்ட பதிவு அட்டைகளுடனும் தங்கள் தேசிய அடையாள அட்டைகளுடனும் குறிப்பிட்ட திகதியில சம்பந்தப்பட்டவர்களை வருமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

பார்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கு குடும்பத் தலைவர் மாத்திரம் வந்தால் போதுமானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ஐ)

## போலி வாகனப் “பாஸ்” வைத்திருந்த சிலர் சோதனையில் அகப்பட்டனர்

யாழ்ப்பாணம் செப் 9

போலி வாகனப் பாஸ்களை வைத்திருந்தவர்கள், அமைதிப் படையினரிடம் மாட்டிக் கொண்டனர்.

நேற்று யாழ். நகரின் சில பகுதிகளில் திடீர் சோதனைகளை மேற்கொண்ட படையினர் இத்தகைய போலிச் வாகனப்பாஸ்கள் புழக்கத்தில் இருப்பதைக் கண்டு பிடித்தனர்.

இதனை அடுத்து போலி அனுமதிப்பத்திரங்கள் வைத்திருந்த சாரதிகளை படையினர் முகாமுக்கு அழைத்துச் சென்றனர். (ஒ-10)

## அறிக்கை தணிக்கை

இம்மாசம் ஆறாம் திகதியிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகத்தின் அரசியற் பிரிவினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று. இந்திய அமைதிப்படையினரால் முற்றாகத் தணிக்கை செய்யப்பட்டதால், அதனைப் பிரசுரிக்க முடியவில்லை என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

வீடுகளைக் கட்டுவதற்கு

## நோர்வே செஞ்சிலுவை 250 குடும்பங்களுக்கு உதவும்

யாழ்ப்பாணம், செப். 9

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் முற்றுமுழுதாக வீடுகளை இழந்த 250 குடும்பங்கள், சுயவீடமைப்பு அடிப்படையில் வீடுகளைக் கட்டிக்கொள்ள நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் உதவ முன்வந்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த நோர்வே செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் வலிகாமம் வடக்குக் கிராமங்களையும், வடமராட்சிக் கிராமங்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இந்தப்பகுதிகளில் அதிகமான குடும்பங்கள் ஷெல் தாக்குதல்களால் வீடுகளை இழந்துள்ளமையைக் கருத்தில்

(6ஆம் பக்கம் பார்க்க)

**சுபநேரம்**

09 – 09 – 88
ஆவணி – 24
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
06.03 முதல் 07.33வரை
ராகுகாலம்:
10 33 முதல் 12.03வரை
நல்லூர் கந்தசுவாமி தேர். காலை 7.00

முச்சந்தி முரளி



வாழ்க்கையே போலிதானே அதாலை சான்றிதழ், உத்தரவுப் பத்திரங்களை போலியாகக் குடுத்தால் என்ன எண்டு சம்பந்தப்பட்ட ஆசாமிகள் நினைச்சிட்டினமோ......!

## பொலிஸ் நிலையம் மீது குண்டு வீச்சு

கடந்தவார இறுதியில் அபயபுர ஸ்ரீ லங்காப் பொலிஸ் நிலையம்மீது குண்டு ஒன்று வீசப்பட்டது. எவருக்கும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இச்சம்பவத்தை அடுத்து. அவ்வழியால் சென்ற தமிழர்கள் பொலிசாரினாலும், சிங்கள மக்களாலும் தாக்கப்பட்டனராம்.

எனினும இந்தியப் படையினர் அங்கு விரைந்து சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (ஒ-150)

## ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும்

### ஐ. தே. க. வேட்பாளர் ஜே.ஆர்?

கொழும்பு, செப் 9

ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானித்திருக்கிறது.

தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மாலை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அவசரமாகக் கூட்டப்பட்டது.

எந்தத்தேர்தலை முதல் நடத்துவது? நாடாளு

(6 ஆம் பக்கம் பார்க்க)

நுணுவில் பகுதியில்

## எதிர்பாராது வெடித்த குண்டுக்கு 3 பேர் பலி?

யாழ்ப்பாணம், செப் 9

சாவகச்சேரி, நுணுவில் பகுதியில் நேற்று, வெடி குண்டு ஒன்று எதிர்பாராதவிதமாக வெடித்ததில் மூவர் கொலையுண்டதாக அறிய வந்தது.

நேற்றுக்காலை எட்டுமணி அளவில் சாவகச்சேரி, நுணுவில் பகுதியில் வெடி குண்டு ஒன்றை மீட்டுச் செயலிழக்கச் செய்யும் பணியில் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

அப்பொழுது அது எதிர்பாராத விதமாக தற்செயலாக வெடித்தது.

குண்டு வெடித்ததில் படையினர் இருவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளை விடுவிக்காவிடில் ராஜீவ் வரும்பொழுது ஆர்ப்பாட்டம்

### தி. மு. க. இளைஞர் அணி திட்டம்

சென்னை.செப். 9

கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை விடுவிக்காத பட்சத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழகம் வரும்போது ஆங்காங்கே ஆர்ப்பாட்டம் செய்யத் திட்டமிட்டுள்ளோம் அதற்கு, தலைமைக்கழகத்திடம் அனுமதி கேட்போம்.

—இப்படி தி.மு.க. இளைஞர் அணி தலைவர் திரு, மு.க ஸ்டாலின் (கருணாநிதியின் மகன்) எச்சரிக்கை விடுத்தார்.

விடுதலைப் புலிகளை விடுதலை செய்யக்கோரி தி.மு.க. இளைஞர் அணி கடந்த வாரம் திருச்சியில் நடத்திய ஆர்ப்பாட்டத்துக்கு திரு ஸ்டாலின் தலைமை வகித்தார்.

அப்போது திரு ஸ்டாலின் மேலும் சொன்னதாவது;

தமிழ் நாட்டில் உள்ள இளைஞர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு உடனடியாகச் சிறையில்

(6ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்
அர்ச்சுனா — செப்ரெம்பர்
வாங்கிப் படித்து விட்டீர்களா?
கலாநிதி சபா ஜெயராசா. கோப்பாய் சிவம், குழந்தை ம. சண்முகலிங்கம், ஆடல் வல்லான், பொ சண்முகநாதன், ஹெலன் பேர்ன்ஸ், மயிலங்கூடலூர் பி நடராசன், உதங்கா சி. சபாநாதன், கழகப் புலவர் பெ. பொ. சிவசேகரனார், முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோரின் ஆக்கங்கள் பொலிவூட்ட,
சிறுவர் ஆக்கங்கள் மணமூட்ட மலர்ந்த
செப்ரெம்பர் இதழ்
விலை ரூபா4/- மட்டும்
உங்கள் பகுதி உதயன் முகவர்களிடம் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
(C-146)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர்லேன், நல்லூர். (C108)

நல்ல நிலையிலுள்ள றலி சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 117, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (6369)

மோட்டார் சைக்கிள் Honda C G 125 90 Sri Series Morris Van 33 Sri Series ஆகிய இரு வாகனங்களும் விற்பனைக்குண்டு. S. நடராசா சிந்தாவத்தை, மூளாய் வீதி, மூளாய். (6368)

பிறிமா இன (Prima) ஒருநாள் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் 10- 9-88 முதல் விநியோகிக்கப்படும். அத்துடன் ஒருநாள் சேவல் குஞ்சுகளும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்க:- M.G.M. Forage Stores, 208, 1st Cross Street, Jaffna. (6172)

### காணி விற்பனை

சித்தங்கேணிச் சந்தியிலிருந்து நூறுமீற்றர் தூரத்தில் சங்கக் கடைக்கு அருகாமையில் ரோட்டு முகப்புடைய மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: அ. கருணாகரர், 8, வைமன் வீதி, நல்லூர். (6360)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C/109)

மிகவும் நல்ல நிலையிலுள்ள குளிர் சாதனப் பெட்டிகள் D/ Freezer நியாயமான விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. Vinoba Trade Centre No. 42 Clock Tower Road, Jaffna. (6365)

உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள் கட்டில், தேக்கு அலுமாரி, கண்ணாடி மேசை, Show-Case, சாப்பாட்டு மேசை, பித்தளைப் பொருள்கள், ஹோல் செற், விருந்தைக் கதிரைகள் உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம், (சென்பற்றிக் சந்தியருகில்,) (6170)

## தேவை

யாழ். நகரில் வெகு விரைவில் ஆரம்பிக்க இருக்கும் ஹோட்டலுக்கு ரீமேக்கர், சமையல் வேலை, இடியப்பம்,பிட்டு தயாரிப்பாளர்கள்; சப்ளையர் வேலைக்கும் நன்கு அனுபவம் உடையவர்கள் நேரில் வரவும். இல. 52, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (6177)

## தேவை

### தொழில் வாய்ப்பு

பாடசாலைச் சிறுபிள்ளைகளின் சேட் வெட்டித் தைக்கக்கூடிய அனுபவம் உள்ளவர்கள் உடன் வேலைக்குத் தேவை. நேரில் வரவும். வசந்தா பேபி காமன்ஸ், ஆடியபாதம் ரோட். (திருநெல்வேலிச் சந்திக்கும், மெடிக்கல் கல்லூரிக்கும் இடையில்) திருநெல்வேலி. (6354)

## சேவை

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெரானோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும். சதுர அடி 30 — 36 வரை தொடர்பு: N P லோகேஸ்வரன், No. 33 மூத்த விநாயகர் 1 ஆம் ஒழுங்கை, சச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். (6151)

யாழ்ப்பாணத்தில் நன்கு காயவைத்த சியாக்காய்,மருந்துச்சரக்குகள், இலுப்பைப்பருப்பு அரைப்பதற்கும்தேங்காயெண்ணெய் ஊற்றுவதற்கும் நெல் உடைப்பதற்கும். ஈஸ்வரி மில்ஸ், (நல்லூர்கல்வியங்காட்டு சந்தைக்கு எதிரில்) வெள்ளிக்கிழமைகளில் மில் திறக்கப்பட மாட்டாது. (6165)

### தவறிவிட்டது

செல்லையா நவரட்ணம் ஆகிய எனது அடையாள அட்டை இல. 483632797 V 04-09-88 அன்று நல்லூர் கோயிலில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது நல்லூர் கோயிலில் ஒப்படைக்கவும். அத்துடன் மோட்டார் சைக்கிள் பாஸ் உள்ளது (6147)

கௌரி குமாரசாமி ஆகியஎனது அடையாள அட்டை இல. 706350543 V 12ஆம் வருட வர்த்தக Notes கொப்பியும், Purse, J/HFC கல்லூரி அடையாள அட்டை ஆகியன 6-9-88 அன்று கைலாசப் பிள்ளையார் கோவிலடியில் தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், (6181)

சின்னப்பு- தம்பிஐயா என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம் இல DO02778, கொமேசியல் வங்கி காசோலைப்புத்தகம் இல 12122. அடையாள அட்டை இல 482092764V மற்றும் தஸ்தாவேஜுகள் கொக்குவில் நுண்கலைக்கல்லூரிக்கும் பிறவுண் வீதிக்கும் இடையில் கைதவறிவிட்டது. இவை எனக்கு முக்கியமானபடியால் உதயன் காரியாலயத்தில் அல்லது 66/13 பிறவுண் வீதி 5 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம் இல ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6373

மருதமுத்து மாடசாமி, உடப்பொலத்தோட்டம் கேகாலை ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் மாடசாமி-நிரஞ்சனியிற்கு இந்திய அமைதிப் படையால் வழங்கப்பட்ட அடையாள அட்டையும் திருநெல்வேலி சைவப்பாடசாலையிற்கும் கிராம சேவையாளர் அலுவலகத்திற்கும் இடையில் 6- 9- 88 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது அம்பாள் பேக்கரி திருநெல்வேலியில் ஒப்படைக்கவும். (6370)

## கல்வி

Spoken English with Grammar மேற்படி வகுப்புக்களுக்கு உடனுதவியாக கைநூல்கள் Series 2, 3, 5, 6 வெளிவந்துள்ளன.கிடைக்கும் இடம் S. B Iyar 12, Wyman வீதி. நல்லூர். (6182)

### A/L இரசாயனம்

108, Brown Road Jaffna A/L 89 இரசாயனம் ஒரு ஒருவருட வகுப்பு ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் 12. 9. 88 திங்கள் 5. 15 p.m (திங், செவ், புதன், வியா, வெள்ளி) எல்லா நட்களும். பிரிவுII ஆரம்பம் 11- 9- 88 ஞாயிறு 4 30 (p. m.) (சனி, ஞாயிறு). விபரங்கள் நேரில் இவ்வாசிரியரின் சேதன இரசாயனம் நூல் வெளிவந்துவிட்டது. (6363)

### A/L இரசாயனம்

108, Brown Road, Jaffna, A/L 89 சேதன இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் 13. 9. 88 செவ்வாய் 4. 30(p m) (செவ்,வியா 4. 30 p.m) பௌதிக இரசாயனம்- ஆரம்பம் (16. 9. 88) வெள்ளி 4. 30 p. m. விபரங்கள் நேரில். இவ்வாசிரியரின் சேதன இரசாயனம் நூல் வெளிவந்து விட்டது. (6362)

G C.E.A/L 89 Aug இற்கான கலை. வர்த்தக வகுப்புக்கள் 14- 9- 88 காலை 8 00 மணிக்கு ஆரம்பமாகிறது Modern Education Centre Karaveddy (கிளை) பருத்தித்துறை. (6351)

### சோதிட, மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம, தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலக்குமி கடாட்சம், நோய்பிணி தீரல், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்களுக்கு நாடுங்கள்;- 'சக்தி சரவண'(அரசஅங்கீகாரம் பெற்றசோதிடரும், மட்டக்களப்புபாரம்பரிய-பரம்பரைமாந்திரீக நிபுணரும்) 210. கஸ்தூரியார் வீதி, (யாழ். இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம் (6372)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards),திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, பவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

### விடுதி ஆரம்பம்

யாழ். இராமநாதன் கல்லூரி கன்னையம் விடுதி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது விபரங்களுக்கு அதிபரைச் சந்திக்கவும். —அதிபர்— (6184)

### வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் 186, கண்டிவீதி யாழ்ப்பாணத்தில் சச்சேரிக்கும் சுண்டுக்குளி பாடசாலைக்கும் அண்மையில் பெந்தேகொஸ்தே சபைக்கு எதிரே, முன்பு D. R. O. Office ஆக இருந்த வீடு, உடனடியாக வாடகைக்கு உண்டு. பிற்பகல் 1மணிக்கும் 5மணிக்கும் இடையில் இவ்வீட்டில் சந்திக்கவும். (6175)

### கல்யாண மண்டபம்

வட்டுக்கோட்டை அடைக்கலத்தோட்டம் முருகன் ஆலயத்தில் ஐந்து லட்சம் ரூபா செலவில் கல்யாண மண்டபம் ஒன்று அமைக்கப் படுகின்றது

மலேசியாவில் வாழும் வட்டுக்கோட்டை மாவயில் பிறந்த சைவப் பெருமகன் கந்தமுத்து குமாரசுவாமி இந்த கல்யாண மண்டபத்திற்கான செலவை ஏற்றுள்ளார். (இ-120)

### அல்லையம்பதியில் தையல் பயிற்சி நிலையம்

பருத்தித்துறை. செப்9 துன்னாலை அல்லையம்பதி கிராம அபிவிருத்திச்சங்க முயற்சியால் தொழிற் திணைக்களம் யுவதிகளுக்கான தையல் பயிற்சி நிலையம் ஒன்றை துன்னாலை அல்லையம்பதியில் ஆரம்பித்துள்ளது.

இந் நிலையத்தின் திறப்புவிழா அண்மையில் தொழில் அதிகாரி திரு. ரி. நடராசா தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா ச்சவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார் (இ-118)

## 21 இல் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப் 9 மேலும் ஒரு தொகுதி ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவை முன்பயிற்சி வகுப்பு இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

இந்தப் பயிற்சியில் கல்விச் சேவை ஆணைக்குழுவினால் ஏற்கனவே தெரியப்பட்ட52 பேரும், அண்மையில் தெரிவுசெய்யப் பட்ட 19பேரும்—

மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் அண்மையில் தெரிவுசெய்யப் பட்டவர்களும், கடந்த 28இல் ஆரம்பமான பயிற்சிக்குச் சமுகம்கரத்தவறியவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

21இல் ஆரம்பிக்கும் இந்தப் பயிற்சி மூன்று வாரங்கள் நடைபெறும். இந்தப் பயிற்சி பற்றிய மேலதிக விவரங்கள் வெளியிடப்படவில்லை.

எனினும் யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் பயிற்சி நடத்தப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. (ஒ-9-119)

### சுட்டுக்கொலை

மூதூர் மணல் சேனையைச் சேர்ந்த முத்துக்குமாரு (38 வயது) என்னும் குடும்பஸ்தர் இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

இச்சம்பவம் மல்லிகைத்தீவுச் சந்தியில் இடம் பெற்றது. (இ-150)

## மின்கம்பத் தண்டனை

கல்முனை ஆதாரவைத்தியசாலைக்கு முன்னால் இளைஞர் ஒருவரின் சடலம் மின் கம்பத்தில் கட்டப்பட்டிருந்தது.

இச் சடலத்தில் தொங்கவிடப்பட்டிருந்த அட்டையொன்றில்:-' இவர் அக்கரைப்பற்று வர்த்தகர் எட்மன்ட் சில்வா குடும்பத்தின் படுகொலைகளுக்குப் பொறுப்பானவர். தமிழீழ விடுதலைப் புலிகளே இவருக்கு மரண தண்டனை விதிக்கின்றனர். மற்றும் இவர் இந்தியப்படை முகாமில் இருந்துகொண்டு விடுதலைப் புலிகளையும், மக்களையும் காட்டிக்கொடுத்து வந்தவர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த இளைஞர் அக்கரைப்பற்று பனங்காடு கிராமத்தைச் சேர்ந்த மாற்று இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகின்றது. (இ-84)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



**செ. தவபாலன்**
அவர்கள்
(முன்னாள் T.V ரதி முகாமையாளர்)

தோற்றம்: 21- 11- 1944 — மறைவு: 23—08—1987
திதி: 9- 9- 88

தவமிருந்து பெற்றெடுத்தோம்
தவபாலன் என பெயர் புனைந்தோம்
தரணியிலே நூறாண்டு தழைத்திடுவாய்
என நினைத்திருந்தோம்
நோயில் நீ தவிக்கவில்லை
பாயில் நீ படுக்கவில்லை
சொல்லாமல் சென்று விட்டாய்
எம்மைக் கொல்லாமல் கொன்றுவிட்டாய்
பெற்றவர்கள் பேதலிக்க
மனைவி மக்கள் பரிதவிக்க
மறைந்து நீ சென்று இன்று
ஓராண்டு ஆகுதையா
ஆனால் உன் நினைவு எம் மனதை விட்டு
என்னாளும் மாறாது மறையாது
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

உரும்பிராய் தெற்கு. (6339)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் பாலசிங்கம் பாலசுப்பிரமணியம்**
(பாலா)

அன்னைமடியில்: 15- 01- 1927 — இறைவன்பாதம்: 10- 08- 1988

எங்கள் அன்புத் தெய்வமே!
எம்மை அன்பினால் நோக்கி
ஆசையாய் அரவணைத்து
பாசத்தால் முத்தமிட்ட தெய்வமே!
என்றுமே சழிந்திடாதா ஐயா!
இமைப் பொழுதும் அகன்றிடாத
பண்பினைப் போற்றுகின்றோம்.
பாசத்தின் நினைவால் இன்று
வெம்மிடும் நெஞ்சமாக
வேதனை அடைந்தோம் ஐயா!
நித்தம் பூ எடுத்து இறைவன்
பாதம் சமர்ப்பித்து குடும்ப ஒளி
வீசிய தந்தையே!
எம்மை விட்டுப் பிரிந்ததேனோ?
மனைவி (அம்மா) அழுத கண்ணீர்;
ஆறாய் பெருகுதையா!
திரவியம், மகிள் எனும் இரு
மலர்களை தத்தெடுத்து மார்பில்
வளர்த்த இரு முகம் காணாது
மறைந்ததேனோ?
எம்மை எல்லாம் ஆறாத் துயரில்
ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்ட எங்கள்
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போமாக!
உங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மணல்தறை லேன்,
கந்தர்மடம். (6337)

## WANTED

Wanted immediately a Printing Works Supervisor for an Established Firm dealing large volume of Printing works, with suitable qualification and experience in this field,

C/o. 355
Uthayan

(C-142)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## கண்ணீர் அஞ்சலி



**செல்வி இராஜலிங்கம் கிரிஷாந்தி**
(A/L 1990 விஞ்ஞானப் பிரிவு மாணவி)

மலர்வு: 22 - 12 - 1971 — உதிர்வு: 05 - 09 - 1988

அன்பு நிறைந்த உன் மனதைக்
கொண்டு பண்புடன் பழகி
கல்வியிலே உனக்கு நிகர் இல்லையென
அகமகிழ்ந்திருந்த வேளைதனில்,
பெற்றவரும் உற்றவருங் கலங்கித் துடித்திட
உடன் கற்றவரும் மலைத்துத் தடுமாறிட
கற்பித்தவரும் நிலை கலங்கிட,
எம்மையெல்லாம் மீளாத்துயரமதில்
மிதக்கவிட்டு எங்குசென்றாய்?
நின் உயிரை இரக்கமற்ற காலன்
கவர்ந்திடத்தான் ஏன் நினைத்தான்?
கிரிஷாந்தியே! உன் பிரிவால் வாடும் நாம்
உன்னை இழந்து வாடும் பெற்றோருக்கு
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன்
நின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து
எமது கண்ணீர் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

THE EXPRESS INSTITUTE KOPAY — A BOON TO STUDENTS

அதிபர்,
நிர்வாக
உதவியாளர்கள்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
(C/150)

## THE JAFFNA EDUCATION CENTRE
(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

வருடம் 6, 7, 8, 9, 10, O/L, A/L
**Spoken English**
**Short-Hand and Typing**
ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும்
**தையல், சங்கீதம்**
ஆகிய வகுப்புக்களும் நடத்தப்படுகின்றன.
புதிய பிரிவுகள் ஆரம்பம்: **10-9-88**

C. G. E. A/L
10-9-88 சனி காலை 8-00 மணிக்கு
தூயகணிதம் — By Bala
9-00 மணிக்கு பிரயோக கணிதம்
By Manium
சனி 2-00 மணிக்கு பொருளியல்
லோகசிங்கம்
இத்துடன் ''பெண்களுக்கு விடுதி''
வசதியும் அளிக்கப்படும். (6180)

## ENGLISH TEACHERS'
TRAINING ENTRANCE
EXAM,
15, TWO HOUR PRACTICE
CLASSES
BY
**S. B. IYAR**
COMMENCES ON 17- 9- 88
SAT, SUN ONLY
Time: 12. 30—2. 30 p.m
12, WYMAN ROAD. NALLUR.
(6185)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விபவ வருடம் ஆவணி மாதம் 27ஆம் நாள் 12-9-88 திங்கட்கிழமை பகல் 11-40 மணி முதல் 1-10மணி வரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

| திரு. திருமதி சுந்தரமூர்த்தி அவர்களின் புதல்வன் திருநிறைசெல்வன் **சிவபாலன்** அவர்களுக்கும் | திரு. திருமதி நா. சி. நாகலிங்கம் அவர்களின் புத்திரி திருநிறைசெல்வி **தர்மினி** அவர்களுக்கும் |
|---|---|

அம்பாள் திருவருளால் தெல்லிப்பழை துர்க்காதேவி அம்பாள் ஆலய மண்டபத்தில் திருமணம் நடை பெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி
சுந்தரமூர்த்தி
சுந்தரமூர்த்தி அன்சன்ஸ்
210, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி
நா. சி. நாகலிங்கம்
இலங்கை பெற்றோலியக்
கூட்டுத்தாபன முகவர்
தெல்லிப்பழை.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை.
(6293)



உ
முருகன் துணை

★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் விபவ ஆண்டு ஆவணித்திங்கள் 27ஆம் நாள் (12-9-1988) திங்கட்கிழமை அத்த நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் பிற்பகல் 5-00 மணி முதல் 6-50 மணி வரைக்குள் தனுசு இலக்கினத்தில் வரும் சுபவேளையில்

| திருநிறை செல்வன் **எஸ், உதயகுமார்** அவர்களுக்கும் | திருநிறை செல்வி **யோக சரோஜினி** அவர்களுக்கும் |
|---|---|

திருவருள் நிலை கொண்டு மேற்கு ஜெர்மனியில் திருமாங்கல்யதாரணம் இனிது நடைபெற இருப்பதால் இதனை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

திரு. திருமதி சண்முகவடிவேல்
குடும்பத்தினர்
''ஜமுனு''
வல்வெட்டித்துறை.

திரு. திருமதி பத்மநாதன்
குடும்பத்தினர்
கிழக்கு கோண்டாவில்,
கோண்டாவில்.

திரு. எஸ். பிரேம்குமார்
Lortzing Str. 15
4600 Dortmund - 1
West Germany
T. Phone: 0231 - 391836.

Herold Str - 13
4600 Dortmund - 1
West Germany.

(6322)



உ
சிவமயம்

*திருமண அழைப்பிதழ்*

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 27ஆம் நாள் (12-9-1988) திங்கட்கிழமை காலை 11-04 மணி முதல் 1-04 மணி வரை கூடிய சுபமுகூர்த்த வேளையில்.

| எமது சிரேஷ்ட புத்திரன் **சிவராஜன்** [ஆசிரியர்] அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட புத்திரி **நந்தினி** [ஆசிரியை] அவர்களுக்கும் |
|---|---|

இறைவன் துணை கொண்டு மணமகளில்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. வே. சிதம்பரப்பிள்ளை
(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்)
தம்பதியினர்
''மணி மகால்''
கனகசபை வீதி,
மானிப்பாய்.

திரு. ச. பரராஜசிங்கம்
(புகையிரத நிலைய அதிபர்முருகண்டி)
திருமதி சாவித்திரி பரராஜசிங்கம்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
'நந்தினி' உடுவில் மேற்கு,
சுன்னாகம். (6324)


# வீடுகளிலிருந்து படையினர் வெளியேறினர்

பலாலி செப் 9

வயாவிளான்பகுதியில் சந்தியைஅண்மித்திருந்த வீடுகளில் இருந்து இந்திய இராணுவத்தினர் வெளியேறி உள்ளனர்.

வீட்டுரிமையாளர்கள் பாவிப்பதற்கு வீடுகளை விட்டு வெளியேறுமாறு வயாவிளான் பிரசைகள் குழு விடுத்த வேண்டுகோளை அடுத்தே படையினர் விட்டு விலகினர் என்று தெரிய வந்துள்ளது.

தற்போது புடைவைக் கைத் தொழில் அமைச்சால் பாவிக்கப்பட்டு வந்த கட்டடம் ஒன்றை மட்டுமே வயாவிளான் சந்தியில் இராணுவத்தினர் தமதுதேவைக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் வயாவிளான் ஸ்ரீ வேற்பிள்ளை வித்தியாசாலைக்கு வட பகுதியாக உள்ளது-இது வரை இந்தியப் படைகளால் 'சென்றி' யாகப் பாவிக்கப் பட்டதுமான நிலங்களில் சென்றிகள் விலக்கப்பட்டுள்ளன.

அகதிகள் புனர்வாழ்வுக் குழுவாலும் வேறு நிறுவனங்களாலும்வழங்கப்பட்ட நிதியைப்பயன் படுத்தி வீடற்றவர்களுக்கும் வீடுகள்உடைக்கப்பட்டவர்களுக்கும் சிறிய வீடுகள்அமைக்கப் பட்டு வருகின்றன.

(இ-119)

## விஞ்ஞான பட்டமாணி பயிற்சி நெறி

பருத்தித்துறை செப் 9

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகம், விஞ்ஞானப் பட்டமாணி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதற்கானமுடிவுதிகதி இம்மாதம் 30 ஆம் திகதி ஆகும்.

இப் பயிற்சிநெறியைக் கற்க விரும்புவோர் ரூபா 30க்கான காசுக் கட்டளையை யாழ்ப்பாண திறந்த பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாமென யாழ் திறந்த பல்கலைக்கழக உதவிப்பணிப்பாளர் திரு. என். மகாதேவன் அறிவித்துள்ளார்.

(இ-118)

# தொண்டமனாறு கிராமத்தில் ஒரு பகுதியில் மின் தடை

யாழ்ப்பாணம், செப் 9

தொண்டமானாற்று கிராமத்தின் நடுத் தெருப்பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது.

தொண்டமானாற்று ஸ்ரீலங்கா இராணுவ முகாம் அமைந்துள்ள இடத்துக்கு மிகச் சமீபமாக உள்ள இவ்வீதிக்குரிய இணைப்பில்இருந்தே இராணுவ முகாமுக்கும் மின் விநியோகம் வழங்கப் பட்டுவருகின்றது.

இரவு ஆறுமணியானதும் மின் விநியோகம் இல்லாமல் போவதால் மக்கள் பெரிதும் கஷ்டத்துக்கு ஆளாகின்றனர்,

மின் மாற்றியில் மேலதிக பளு சுமத்தப்படுவதே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

(இ-126)

# 87 ஜூனுக்குப் பின் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் அதிருப்தி

## உணவு முத்திரை இல்லாததால்

காங்கேசன்துறை,செப்.9

1987 ஜூன் மாதத்துக்குப் பின்னர் பிறந்த குழந்தைகளுக்கு உணவு முத்திரை வழங்கப்பட மாட்டாது என்று கைவிரிக்கப்படுவதால் பெரும் எண்ணிக்கையான குழந்தைகளின் பெற்றோர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

உணவு முத்திரை விநியோகவேலைகள் கடந்த மாத இறுதிவாரத்தில் மேற்கொள்ளப்பட்டன.

அச்சமயம் 1987ஜூன் மாதத்துக்கு முன்னர் பிறந்த குழந்தைகளுக்கு மட்டுமே உணவு முத்திரைகள் வழங்கமுடியும் என தெரிவித்து அதற்கான விண்ணப்பங்களை கிராம சேவையாளரின் சிபார்சுடன் உதவி அரச அதிபர் அலுவலகங்கள் பெற்றுக்கொண்டன.

1987 ஜூனுக்குப் பின்னர் பிறந்த குழந்தைகளுக்கு உணவு முத்திரைகள் வழங்கப்பட மாட்டாது என்று கூறி அக்குழந்தைகள் பெயரில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படவில்லையென்று கூறப்படுகிறது. (இ- 68)

## கரணவாய் வடக்கில் திருடர் தொல்லை

கரணவாய் வடக்கில் கொள்ளையரின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது.

கணபதிப்பிள்ளை என்பவரின் வீட்டை உடைத்து உட்புக முனைந்த ஆயுதங்கள் சகிதம் வந்த கொள்ளை கோஷ்டியினர் அவ்வீட்டிலிருந்தவர்கள் அவலக்குரல் எழுப்பியதால் தப்பி ஓடிவிட்டனர்.

திருடர்களின் நடமாட்டத்தால் இங்குள்ளவர்கள் இரவில் அச்சத்துடன் வாழ்கின்றனர். (இ)

நல்லூர்க் கந்தா! தேரேறி வந்து காத்திடுமையா!






## தமிழ் பொதுப்பணி மன்றம்

சுன்னாகம்,செப். 9

ஏழாலை தெற்கு தமிழ் பொதுப்பணி மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. மு. சிறீ ரஞ்சிற், உப தலைவர் திரு.ந.தேவானந்த், செயலாளர் திரு.யே. நேசன் உப செயலாளர்திரு.ஜெ. ஜெயறஞ்சிற், பொருளாளர் திரு. சி.சிறீதரன்.

நிருவாகக் குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் ஈ.ராகவன், ஜீ. ஜீவரூபன், பா. உருத்திரபிரகாஷ், நா.கிருபாகரன், இ.ஜீவகாந்தன் ஆகியோரும் போஷகர்களாக திரு. சி. சிற்றம்பலம், திரு. மு. முத்துச்சாமி, திரு.க. விவேகானந்தன் ஆகியோரும் தெரிவாகினர். (இ-27)

## கம்பன் கழக போட்டிகளில் வெற்றி பெற்றோர்

காரைநகர் செப் 9

காரைநகர் கம்பன் கழகத்தினரால் நடத்தப் பட்டகட்டுரைப் போட்டிகளில் பரிசு பெற்றோர், பா.சேந்தன், ம. நந்தினி, பா. மயூரன், பா. சிவமணி, இ. சிவாஜினி, ஏ. சிறிகாந்தன் (யாழ்ற்றன் கல்லூரி)

த. விக்கினேஸ்வரன், யோ. தர்மேஸ்வரன் பொ. ஜெயந்தினி, சி. சுலோசனுதேவி, (தியாகராசா வித்தியாலயம்)

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர்: பா. மயூரன் லே. கிரிதரன்,சே. சாந்தலக்ஷ்மி, பா. சேந்தன், த. சுமதி, தி. தில்லைவதனு (யாழ்ற்றன் கல்லூரி)

ப.ஜெயதாம்பிகை, பா. கிருசாந்தினி, ப.நாகரஞ்சித ப் தி. சவ்க்கினேஸ்வரன்(தியாகராஜா வித்தியாலயம்) (இ-73)


வின்ஸர் வெண் திரையில்
10. 30—2. 30 மட்டும்
3 ஆவது வெற்றி வாரம்!
கலைக்குரிசில் சிவாஜி கணேசன்
ரேவதி, சுரேஸ், ஜெய்சங்கர்
Y. G. மகேந்திரன், மனோரமா
நடித்த

★ மருமகள் ★

நல்லமருமகளைத்தேர்ந்துஎடுக்கும் பரீட்சையினைப் பார்த்து மகிழுங்கள்.
திரளான பெண்கள் ரசித்து மகிழும் ஒப்பற்ற ஓவியம். (6325)



நல்லூரில் கோயில் கொண்ட
தமிழ்த் தெய்வமே!
தமிழர் தம் குறை தீர்த்தருள் குமரா
தேர் மீது வலம் வரும் முருகா
அடியவர் வினை தீர்த்தருள் மருகா!

குளிர்சாதனப்பெட்டிகள் திருத்த வேலைகளுக்கும், குளிர் ஊட்டலுக்கும், ரீ. வி, மின் மோட்டர் மற்றும் மின்சார உபகரணங்கள் திருத்த வேலைகளுக்கும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையும் அபிமானமும் பெற்ற ஒரே ஸ்தாபனம்.

UNI SERVICES ENGINEERS,
No. 19, Asseervatham Lane,
Off Hospital Road,
Jaffna.
(C/55)



2ஆவது பிறந்த நாள்
செல்வன் மயூரன்

யாழ்ப்பாணம் கந்தர்மடம் இல: 7ஐச் சேர்ந்த ஞானதேசிகன் – ஜீவா தம்பதிகளின் செல்வப் புதல்வன் மயூரன் இன்று தனது 2ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார். இவரை அன்புப் பெற்றோர், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார் மற்றும் அளவெட்டி, காரைநகர், களபூமியைச் சேர்ந்த உற்றார், உறவினர்கள் அனைவரும் பல கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

K. வரதராசா
களபூமி, காரைநகர்.
(6332)



★ திருமண அழைப்பு ★

மணமகன் : திருநிறை செல்வன் அ. பாலசுப்பிரமணியம் (பாலேந்திரா)

மணமகள் : திருநிறை செல்வி க. சந்திரலிலா

இடம் : நல்லூர் சிவன்கோவில்
காலம் : 12-09-88 திங்கள் காலை 6.26 முதல் 7.32 வரை

உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. க. அப்புத்துரை
திருமதி ஞா. கனகலிங்கம்
19, பண்டாரக்குளம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி கந்தையா
''யோகவாசா''
11/7, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
[6164]



உ
திருமாங்கல்யதாரணம்

முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன் B.A. (Hons.)
அவர்களுக்கும்
(கோப்பாய் தெற்கு) கேந்திரேஸ்வரி கந்தசாமி B.A. (Hons.)
அவர்களுக்கும்

15.9.88 வியாழக்கிழமை பகல் 10.22 மணிக்கு நல்லூர் சிவன் கோவிலில் நடைபெறவிருக்கும் திருமணத்தை முன்னிட்டு 17-9-1988 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் விருந்துபசாரத்தில் பங்கு கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு. திருமதி கா. சி. செ. முத்துக்குமாரு
பிரசித்த நொத்தாரிஸ்
ஏ சி எஸ் தொகுதி,
ஸ்தாபன இயக்குநர்
சுன்னாகம்.

''துர்க்காஹோம்''
8/2, தோம்பை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
[C/3]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் நிலையங்களுக்கு வயர்லஸ் தொடர்பு

வவுனியா, செப், 9

மாங்குளம், அனுராதபுரம், சல்லோயா, சினக்குடா, புத்தளம் ஆகிய இடங்களில் உள்ள ரயில் நிலையங்களுக்கு வயர்லஸ் ரேடியோக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரயில் நிலையங்களுக்கிடையிலான சீரான தொலைத் தொடர்புகளை ஏற்படுத்தப் பயன்பட்ட தொலைபேசி முறை தற்போதைய நாட்டு நிலை காரணமாக சீரற்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதனாலேயே புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றைப் பயன்படுத்தி கொழும்பு, அனுராதபுரம் ஆகிய இடங்களில் உள்ள ரயில்வேக் கட்டுப்பாட்டாளர் அலுவலகம் சுலபமாக நொடிப் பொழுதில் தொடர்பு கொள்ள முடிகிறது.

வவுனியாவுக்கென வழங்கப்பட்டிருந்த வயர்லஸ் ரேடியோ தற்போது மாங்குளத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண ரயில் நிலையத்துக்கும் வயர்லஸ் வழங்க ஏற்பாடாகி உள்ளது.

(ஒ-164)

விஸ்வமடு கிராம நிலைமை:

## உதவி அரச அதிபர்கள் நேரில் சென்று பார்த்தனர்

யாழ்ப்பாணம், செப் 9

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. சு. தனபாலசிங்கம் புதிதாக வர இருக்கும் அரசாங்க அதிபர் திரு இராசரத்தினம் காணி உத்தியோகத்தர் தி. மாசிலாமணி ஆகியோர் விஸ்வமடுக் கிராமப் பகுதியைச் சென்று பார்வையிட்டு அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்

இச்சந்திப்பின் போது அப்பகுதி மக்கள் தமது கஷ்டங்களை அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தனர். இதுவரை இக்கிராம மக்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படாதிருப்பது குறித்தும் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது.

நிலைமையை நன்கு அவதானித்த அதிகாரிகள் முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கு விவரமான ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர்.

(இ-126)

யா/வதிரி திரு இருதயக் கல்லூரி
கரவெட்டி

**பவளவிழா 1913-1988**

காலம்: 1988 செப்ரம்பர்
19, 20, 21 ஆம் நாள்கள்

20-09-88 இல் நடைபெறும் விழாவில் இக்கல்லூரியில் கற்பித்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் கௌரவித்துப் பாராட்டப்பட உள்ளனர். எனவே, தயவுசெய்து அத்தகைய ஆசிரியர்கள் அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

அதிபர்

(6334)

**Special English Classes**

Further Education Programme
**Uduvil Girl's College, Chunnakam.**

★ விசேட ஆங்கிலக் சற்கை நெறிகள்
★ பேச, எழுத, வாசிக்க, விளங்க வழி செய்யும் போதனை.
★ பாடசாலை விலகிய, உயர்கல்வி மேற்கொள்ளும் மாணவ, மாணவிகட்குரிய பாடத்திட்டத்தைக் கொண்டது.
★ சற்கை நெறிகள்;

1. Special English
2. N.C.E. Sri Lanka / London

★ வாரத்தில் 3 நாட்கள்-பரீட்சைக்குரியது.
★ முற்பகல் — பிற்பகல் வகுப்புகள்.

ஆரம்பம்: 12-09-1988 - பி.ப. 1 மணி

தொடர்பு கொள்க:
the Directress
உடுவில் மகளிர் கல்லூரி,
உடுவில்.

(6336)

தேரேறி வரும் நல்லூர்க் கந்தன் எல்லோருக்கும் அருள் பாலிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**NEW MASTER INSTITUTE**

B. M. C. LANE, JAFFNA.

**89 A/L DAY CLASSES**

ஆரம்பம் 14-09-88
புதன் காலை 7-30 மணி

| | |
|---|---|
| ZOOLOGY | 7-30 — 8-30 a.m. |
| CHEMISTRY | 8-30 — 9-30 a.m. |
| PHYSICS | 9-30 — 10-30 a.m. |
| BOTANY | 10-30 — 11-30 a.m. |
| PURE & APPLIED MATHS | 10-30 — 12-30 p.m |

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

★ கடந்த ஆண்டுகளில் முழுப்பாடத் திட்டமும் குறித்த காலத்தில் முடித்த ஒரேகல்வி நிறுவனம். ★

(C-117)

முல்லைத்தீவு உட்பட பல பகுதிகளுக்கு

# மாங்குளம் உணவுக்களஞ்சியத்திலிருந்து அவசர உணவு விநியோகம்

மாங்குளம், செப் 9

மாங்குளம் உணவுக் களஞ்சியத்தில் இருந்து முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, துணுக்காய், பாண்டியன்குளம், பரந்தன், கிளிநொச்சி, நெடுங்கேணியின் ஒரு பகுதி ஆகியவற்றுக்கு அவசரமாக உணவு விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

விஸ்வமடுப் பகுதிக்கு 2 லோட் மாவும், முத்தையன்கட்டுக்கு 2 லோட் அரிசியும், நெடுங்கேணிக்கு 1 லோட் அரிசி, 1 லோட் மாவும் முல்லைத்தீவுக்கு 5 லோட் மாவும், 3 லோட் அரிசியும் இதுவரை அனுப்பப்பட்டுள்ளன.

மற்றும் முல்லைத்தீவுக்கு 3500 லீற்றர் மண்ணெண்ணெய்யும், 3500 லீற்றர் டீசலும் உடனடியாக அனுப்பப்பட்டுள்ளன

கிளிநொச்சி பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திலிருந்து முல்லைத்தீவுக்கு 900 லீற்றர் மண்ணெண்ணெய்யும் புதுக்குடியிருப்புக்கு 3700 லீற்றர் மண்ணெண்ணெய்யும் முத்தையன்கட்டுக்கு 4500 லீற்றர் மண்ணெண்ணெய்யும் விஸ்வமடுவுக்கு 4500 லீற்றர் மண்ணெண்ணெய்யும் நெடுங்கேணியிலிருந்து மாங்குளத்திற்கு 5550 லீற்றர் மண்ணெண்ணெய்யும் துணுக்காய்க்கு 4500 லீற்றர் மண்ணெண்ணெய்யும் பாண்டியன் குளத்திற்கு 4500 லீற்றர் மண்ணெண்ணெய்யும் புதுக்குடியிருப்புக்கு 1850 லீற்றர் டீசலும் முத்தையன்கட்டுக்கு 4500 லீற்றர் டீசலும் விஸ்வமடுவுக்கு 4500 லீற்றர் டீசலும் நெடுங்கேணியிலிருந்து மாங்குளத்திற்கு 5550 லீற்றர் டீசலும் துணுக்காய்க்கு 4500 லீற்றர் டீசலும் பாண்டியன்குளத்திற்கு 4500 லீற்றர் டீசலும் பெறப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திலிருந்து கடனுக்கு பெறப்பட்ட எரிபொருள்கள் பகுதி பகுதியாக பெறப்பட்டு சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. (இ-94)

### இலவச சிகிச்சை

காங்கேசன்துறை, செப்9

கீரிமலை கருகம்பானை ஆரம்ப சுகாதார பகுதியினரின் ஆதரவுடன் சுகாதார நல நடவடிக்கைகளையும், இலவச சிகிச்சைகளையும் மேற்கொண்டுள்ளது.

கருகம்பானை, கூவில், மயிலங்கூடல, கீரிமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் நன்மை கருதி இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன், டாக்டர் கணேசலிங்கம் ஆகியோர் இலவசவைத்திய சிகிச்சைகளை அளித்து வருகின்றனர்,

சொறிசிரங்கு. இரத்த சோகை, பூச்சித் தன்மை போன்ற பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கர்ப்பிணிகள், சிறுவர்களுக்கான சிகிச்சைகளும் இடம் பெறுகின்றன. (இ68)

## மினி சினிமாக்கள் மீது மக்கள் பெரும் மதிப்பு

### திறப்பு விழாவில் தலைவர் உரை

யாழ்ப்பாணம், செப், 9

மினி சினிமாக்களை ஆபாசக் கண் கொண்டு பார்த்த சிலர் தற்பொழுது குடும்பத்துடன் சென்று மினி சினிமாப் படம் பார்க்கும் நிலை தோன்றியுள்ளது. போராளிகள் குழுக்கள் எடுத்த ஒரு தற்காலிக நடவடிக்கையே மினிசினிமாக்கள் மீது பொதுமக்கள் மதிப்பும் மரியாதையும் வைக்க ஏதுவாகி உள்ளது.

யாழ் மாவட்ட மினி சினிமா, சங்கத்தலைவர் செ. வசீகரன், மினி சினிமா சங்க காரியாலயத் திறப்புவிழாவில் தலைமை உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

விழாவில் யாழ் மாநகர ஆணையாளர் திரு. சீ. வி.கே.சிவஞானம் கலந்து கொண்டு காரியாலயத்தைத் திறந்து வைத்தார்.

விழாவில் தலைவர் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

மினி சினிமாக்களை நெறிப்படுத்தும் போராளிகள் இதுவரை திரைமறைவாகவே இருந்து வருகின்றனர்.

இந்த திரைமறைவு நடவடிக்கையை பயன்படுத்தி சில போலிகள் அனாமதேயக் கடிதங்கள் மூலமும், மிரட்டல் மூலமும் மினி சினிமாக்களை கட்டுப்படுத்த முனைகின்றார்கள். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்தக் கட்டுப்பாடுகளை மேற்கொள்வதாயின் சங்க தலைமைக் காரியாலய மூலம் தொடர்பு கொள்பது வரவேற்கத்தக்கது.

இவ்வாறு வேண்டுகோள்விடுத்தார்.

இவ்விழாவில் மினி சினிமா சங்கச் செயலாளர் திரு. குலேந்திரன் நன்றியுரை வழங்கினார். (இ-91)

தேர் ஏறி வரும்
நல்லூர்க் கந்தனின் அருள்பெற
வாழ்த்துகின்றோம்.

**S. SINNATHURAI & BRO.**
39, K. K. S. ROAD,
JAFFNA.

பின்வருவனவற்றின் வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:

1. B. C. C. Ltd.
2. J.L. மொரிஸன்&சன்ஸ் ஜோன்ஸ் சிலோன் லிமிட்டெட்.
3. பாட்டா பாதணிகள்
4. யூனியன் கார்பைட்

(6303)

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும்
வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான
கம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic Language
பயிற்சிக் காலம்: 40 நாள் (திங். புதன், வெள்ளி)

ஆரம்பம்: 12.09.88

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய் முறைப் பயிற்சி Amstaed, EG 2000, Commodore, Laser ஆகிய கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்

விண்ணப்ப முடிவு நாள்: 10.09.88

Computer Programming in Cobol Language
பயிற்சிக் காலம்: 3 மாதம் (சனி, ஞாயிறு வகுப்புகள்)
செய்முறை பயிற்சி ARC (IBM Compatable) கம்பியூட்டரில் வழங்கப்படும்

**UNIKCO COMPUTER CENTRE**
No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம் (உபதபாற்கந்தோர் அருகாமை)

(C/37)

## சட்டத்தரணி மரணம் குறித்து மேல் விசாரணை 14 ஆம் திகதி ஆரம்பமாகும்

கொழும்பு, செப் 9

சட்டத்தரணி விஜேதாஸ லியனாராட்சி மரணம் சம்பந்தமாக மேல் நீதிமன்ற விசாரணை இம்மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்காவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் மேலும் சொன்னதாவது;

சட்டத்தரணியின் மரணம் குறித்து அரசு கவலை கொண்டு உள்ளது

இவ்விஷயம் குறித்து பூரண விசாரணை நடத்தப்படும்.

இலங்கையில் மட்டும் தான் இச்சம்பவங்கள் இடம் பெறுவதாகக்கூறி விட முடியாது.

வேறு நாடுகளிலும் இது போன்று நடைபெறுகின்றது.

பொலிஸ் காவலில் இருப்பவர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தக் கூடியதான சட்டத்திருத்தங்களை எமது அரசு தான் கொண்டு வந்தது.

இப்படி திரு.அத்துலத் முதலி சொன்னார்.

## சார்க் தீர்மானம் சட்டமாகும்

கொழும்பு, செப்.9

சார்க் அமைப்பு நாடுகள் கையெழுத்திட்டுள்ள பயங்கரவாதஒழிப்பு நடவடிக்கைத்தீர்மானம் பற்றிய சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என்று அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்தது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன இது சம்பந்தமான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

கடந்த ஆண்டு காத்மண்டுவில் சார்க்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத ஒழிப்புத் தீர்மானம் சம்பந்தமான உடன்பாட்டில் வெளிநாட்டமைச்சர்கள் கையெழுத்திட்டிருந்தனர். (ஒ-எ)

## சிங்களவர் மீளக்குடியேறிய பின்பே இராணுவத்தைப் பாதுகாப்புக்குப் பயன்படுத்தலாம்

### சிங்களப் பிரதிநிதியின் கேள்விக்குப் பதில்

திருகோணமலை, செப் 9

ஒப்பந்தத்தின்படி இலங்கை இராணுவத்தை கடமையில் ஈடுபடுத்த முடியாது. ஆனால் இலங்கைப் பொலீசாருடன் இந்திய அமைதிப்படை சேர்ந்து சேவையில் ஈடுபட முடியும் ஆனால் இடம் பெயர்ந்த சிங்கள மக்கள் மீளக் குடியேறிய பின்னர் அங்கு இலங்கை இராணுவத்தை பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்த முடியும். திருகோணமலை நகரிலுள்ள சமாதானக் குழுக்களின் கூட்டம் சமீபத்தில் இந்திய அமைதிப்படையினரின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற போது அங்கு கருத்துத் தெரிவித்த அதிகாரிகள் மேற்கண்டவாறு கூறினர்.

கூட்டத்திற்கு நகரக் கமாண்டர் பிறிகேடியர். எம் டி. மிஸ்ரா தலைமைவகித்தார்.

இந்தியப் படையின் கேணல்கள். சிவாஜி பட்டேல், கில் ஆகியோரும் திருமலையின் புதிய இணைப்பதிகாரி பிறி, திலக் பறணகம ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சிங்கள, தமிழ் சமாதானக் குழுப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

சிங்கள மக்கள் இங்கு பீதியுடனும் பயத்துடனும் அகதிகளாக வாழ்கின்றனர். ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தவிர நகரில் வேறு இடங்களுக்குச் செல்ல முடியவில்லை. மருத்துவ மனைக்குக் கூடச் செல்வதற்கு சிங்களவர் அஞ்சுகின்றனர். ஆகவே இலங்கைப் பொலீஸாருடன் இலங்கை இராணுவத்தையும் கடமையில் ஈடுபடுத்த வேண்டும் என சிங்களப் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்.

அப்போதே முன்னர் குறிப்பிட்டவாறு அதிகாரிகள் பதில் அளித்தனர்.

அகதிகளை மீளக் குடியமர்த்துவது சம்பந்தமாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இந்த விடயத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. அத்தோடு வீடுகட்டுவதற்குரிய பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அத்துடன் சென்ற இரண்டு கிழமைக்கும் மேலாக அதிகாரிகள் கச்சேரிக்கு வேலைக்குச் செல்லவில்லை. இந்தக் காரணங்களாக மீளக் குடியமர்த்தும் வேலைகள் தாமதமாகி வருகின்றன என்று மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜி கிருஷ்ணமூர்த்தி எடுத்துக் கூறினார்.

தமிழ் மக்கள் இன்னமும் பயம், பீதியுடனும் தான் வாழ்கிறார்கள். கோட்டைக்குச் சென்று கச்சேரியில் கடமைகளைச் செய்வதற்கு இப்போதும் பயந்து பயந்துதான் ஊழியர்கள் செல்கின்றனர்.

கோணேசர் ஆலயத்திற்குக் கூட பக்தர்கள் செல்ல முடியாத நிலை நிலவுகிறது. ஆகவே தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு போதாது என 10 ஆம் குறிச்சியைச் சேர்ந்த திரு.சண்முகநாதன் கூறினார்.

இக் கட்டத்தில் ஒரு சிங்கள உறுப்பினர் நாங்களும் (சிங்களவர்) எங்கும் செல்வதற்கு வசதியிருந்தால் நீங்களும் (தமிழர்கள்) கோணேசர் கோவிலுக்குப் போய் வரலாம்' என்றார்.


இலங்கைப் பொலீசாருடன் தமிழ் பொலீசாரையும் கடமையில் ஈடுபடுத்த வேண்டும் என தமிழ் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

இதற்குப் பதிலளித்த பொலீஸ் அத்தியட்சகர் தனக்கு பூரண சம்மதம் என்றும் ஆனால் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக தமிழ் பொலீசார் கடமைசெய்வதற்கு முன்வருகிறார்கள் இல்லை எனவும் கூறினார்.

ஊரடங்குச் சட்ட நேரத்தைத் தளர்த்தும்படி கூட்டத்தினர் விடுத்த வேண்டுகோளை அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளவில்லை.

(இ-150)

உஷா
பெருமிதமாக அறிமுகம் செய்யும் பலவிதமான சீலிங் மின்விசிறிகள்



உஷா ஸ்டான்டர்ட்
விலை: ரூபா 1500 முதல் 1575/-வரை

● 36'', 42'', 48'', 56'' அளவுகளில்
● ஒரு அடி நீளமான சிறந்தண்டு, இணைப்பு வசதிகள் இரப்பர், புஷிங் 2 கவசங்கள், 5 வேக ரெகுலேட்டர் என்பவற்றுடன் பூர்த்தியானது.
● மேலதிகமாக ரூ 75/ செலுத்தி மின்குமிழ் ஒன்றை இணைத்துக் கொள்ளலாம்.

அண்மையிலுள்ள உஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள்!

தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு

உஷா அலங்கார விசிறிகள்
பொன் வண்ணத்திலும் அலங்கார இணைப்புகளுடனும்
விலை ரூ 1750/= முதல் 1975/= வரை

● தேவைக்கேற்ப கபில நிறத்திலும் வெள்ளை நிறத்திலும்
● கொள்வடிவ மின்கமிழ

தயாரித்து விநியோகிப்போர்.
உஷா இன்டஸ்ரீஸ் லிமிடெட்
68. அத்திடிய ரோட் ரத்மலானை
தொலைபேசி: 71 6922, 71-7934, 71-7161

நீர்வையிலிருக்கும் கிளை ஆலோசனை மையம்... [illegible]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சிவலோகேஸ்வரி சிவதாசன்

பிறப்பு: 16-09-1943
இறப்பு: 22-08-1987
திதி: 09-09-1988

விண்ணில் ஆண்டவனோடு இரண்டறக் கலந்து விட்ட உங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

என்றென்றும் அன்புடன்
கணவன், மகள், உறவினர்.

(6317)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

**பொருள்:**

சேர்க்கும் திறம் அறிந்து தீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டு வந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும், இன்பத்தையும் கொடுக்கும்.


# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

இல:– 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22073
09-09-1988 வெ. ஆ. 23


## சரித்திரம் திரும்புகிறது

சரித்திரம் மீண்டு வரும் என்று ஒரு வாக்கியம் உண்டு. அதாவது வரலாறு நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் நடப்பதுண்டு என்பது அதன் அர்த்தம்.

இலங்கையைப் பொறுத்த மட்டில் நிகழ்வுகள் மீள வருவதற்கு பல காலம் தேவைப்படுவதில்லை. மிகக்குறுகிய காலத்திலேயே சரித்திரம் மீண்டு வருகிறது.

கடந்த ஐந்து வருடங்களாக ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போனார்கள். அவர்கள் இருந்த இடம் தெரியாது படையினரால் அழிக்கப்பட்டனர். அப்போது அதன் தாக்கம் தென்னிலங்கை மக்களுக்குப் புரியவில்லை.

இப்போது சரித்திரம் மீண்டு தென்னிலங்கையில் சாவுகள் மலிந்து விட்டன. உதாரணத்துக்கு பொலீஸ் காவலில் இருந்தபோது மரணமான சட்டத்தரணி விஜேதாஸ லியனாராச்சி என்பவரின் மரணத்தைச் சொல்லலாம்.

சட்டத்தரணி லியனாராய்ச்சியின் மரணம் கேட்டுத் தென்னிலங்கை கொந்தளிக்கிறது. கடை அடைப்பு நடக்கிறது. ஹர்த்தால் நடக்கிறது. ரயில்கள் ஓடவில்லை. வாகனங்கள் ஓடவில்லை, நீதிமன்றங்களில் பகிஷ்கரிப்பு என்று இத்தியாதிகள்.

அரசாங்கத்தின், அரசாங்க ஏஜண்டுகளான படைகளின் அக்கிரமத்துக்கு எதிராக சிங்கள மக்கள் ஆட்சேபம் தெரிவிக்கிறார்கள்.

அவர்களின் கொந்தளிப்பைக் குறைப்பதற்காக சட்டத்தரணியின் மரணம் குறித்து விசாரணை நடத்த அரசு உத்தரவிட்டிருக்கிறது. அது மட்டும் என்ன? படையினருக்கு பாதுகாப்பு அளிப்பதற்கென கொண்டு வர இருந்த சட்ட மூலமும் வாபஸ் பெறப்பட்டு விட்டது. இப்போதைக்கு அதனை நடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில்லை என்றும் முடிவாகி இருக்கிறது.

சட்டத்தரணி விஜேதாஸவின் மரணம் விசாரிக்கப்படவேண்டியது குற்றவாளிகள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அது குறித்து அரசு நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் நடவடிக்கை அரை வழியில் நிற்காமல், பூரணமாக நடந்தேறி உண்மை அம்பலத்துக்கு வர வேண்டும் குற்றவாளி தண்டிக்கப்பட்டாக வேண்டும்.

சிங்கள மக்களின் ஆட்சேபத்துக்குச் செவிமடுத்து, நடவடிக்கை எடுக்க முன்வந்த அரசு, தமிழ்ப் பகுதிகளில் நடந்த கொலைகள் குறித்து என்ன நடவடிக்கையை மேற்கொண்டது?

எத்தனை தமிழர் விசாரணையின்றிக் கைது செய்யப்பட்டு, 'சரிக்கட்டப்பட்டு' விசாரணை இன்றியே புதைக்கப்பட்டார்கள்! போராளிகள் மட்டுமல்ல, அப்பாவி மக்களும் இதில் அடங்கினர்கள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் அரசாங்கப் பாதுகாப்பில் கைதிகளாக இருந்த 53 பேர் படுகொலை செய்யப்பட்டு ஐந்து வருடங்களும் பறந்து விட்டன. அது குறித்து ஒரு விசாரணை வைக்கவாவது அரசு நினைத்ததா?

நாம் சொல்ல வருவது என்னவென்றால் பதவிக்கு வருவதற்கு சிங்கள மக்களின் வாக்குத் தேவைப்படுவதால் அவர்களின் விடயங்களில் கவனமாக இருக்கும் அரசு— தமிழர்களைப் பற்றி அக்கறைப்படாமல் அவர்களை இரண்டாம் தரப் பிரசைகளாகக் கூட கணிக்காது அந்நியர் போலவே சகல விவகாரங்களிலும் நடத்தி வருகிறது. தமிழர்களின் துன்ப துயரங்களை மனிதாபிமான ரீதியில் கூட அரசு நோக்குவது இல்லை.

இத்தகைய ஒரு தொடர்நிலையில், சற்றும் திருத்தம் இல்லாத நிலையில் தமிழ் மக்கள் தங்களுக்கென ஒரு தனியரசு நிறுவ நினைப்பதில், அதற்காக போராட முனைவதில் என்ன தப்பு?

## நீவின் டார்காவில்

டாக்கா, செப். 8
பர்மாவில் அரசுத் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்த ஜெனரல் நீவின் பங்களாதேஷில் தஞ்சம் புகுந்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷ் முன்னாள் எம். பி. ரஷீத், நீவின் 26 பேருடன் டாக்கா வந்தார் என்று அறிவித்திருக்கிறார்.

அரசு வட்டாரங்கள் இதனை மறுத்தன. (எ)

# தமிழ் நாட்டில் ஜனவரியில் புதிய அரசு; காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும்!

## தலைவர்கள் அறிவிப்பு

சென்னை, செப். 9
தமிழ் நாட்டில் ஜனவரி மாதம் புதிய அரசு பதவி ஏற்படும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் சுருப்பையா மூப்பனார் தெரிவித்தார்

சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தனித்தே போட்டியிடும் என்று அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் தலைவர் அரிபிரசாத் தெரிவித்திருக்கிறார்.

திரு அரிபிரசாத் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் சொன்னதாவது:

தமிழ் நாட்டில் காங்கிரஸ் தனித்தே போட்டியிடும். தேர்தல் கூட்டு யாருடனும் இல்லை.

பொதுமக்கள் ஆதரவு காங்கிரஸ் கட்சிக்கு எப்போதும் உள்ளது.

இப்படி அவர் சொன்னார். (எ)

## கவலை வேண்டாம்! மண்டேலா செய்தி

எனது உடல் நிலை பற்றி கவலைப்பட வேண்டாம்—

இப்படி கறுப்பு இனத் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.

தனது மருமகள்மூலம் இச்செய்தியை ஆபிரிக்க மக்களுக்கு அவர் விடுத்தார். (எ)

வெளி உலகில்

# 2000 ஆவது ஆண்டில் படிப்பறிவற்றவர் 100 கோடி?

அம்மான்' செப் 8
வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் 2000 ஆவது ஆண்டில் 100 கோடிபேர் படிப்பறிவற்றவர்களாக இருப்பர் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர்க்க இந்த நாடுகள் கூடுதல் நிதியை கல்வித்துறைக்கு ஒதுக்க வேண்டும் என்று ஐ. நா. அபிவிருத்தித் திட்ட செயலாளர் நாயகம் வில்லியம் றேப்பர் தெரிவித்தார்.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் கல்வி வளர்ச்சிக்கு 1972 இல் 13.2 சத வீத நிதி ஒதுக்கப்பட்டது. இது 1985இல் 7.6 சத வீதமாகக் குறைக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## சஞ்சய்சிங்குக்கு மேலும் காவல்

லக்னோ, செப் 9
இந்திய பாட்மின்ரன் வீரர் சையத் மோடி கொலை தொடர்பாக மத்திய புலனாய்வுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட ஜன் மோர்ச்சா அரசியல் கட்சிப் பிரமுகர் டாக்டர் சஞ்சய்சிங், மேலும் காவலில் இருக்க வேண்டும் என்று லக்னோ நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ)

# சீன ஆயுத விற்பனையில் ஈடுபடுவது அமெரிக்காவுக்குகவலை தருகிறதாம்!

பீகிங், செப் 8
அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் பிராங்க் கருலுசி பீகிங் விஜயம் செய்தார்.

அங்கு சீன அரசு அமைச்சர்களுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

சீனா ஏவுகணைகளை ஏனைய நாடுகளுக்கு விற்பது குறித்து அமெரிக்கா கொண்டுள்ள கவலையை அவர் சீன அரசுக்கு தெரியப்படுத்தினர்.

சீனா ஓர் இறைமையுள்ள நாடு. எந்த நாடுகளுக்கும் ஆயுதங்களை விற்க சீனாவுக்கு உரிமையுண்டு. ஆனால் ஏவுகணைகளை விற்பது குறித்துத்தான் நாம் கவலை கொண்டுள்ளோம்.

சவூதி அரேபியாவுக்கு சீனா ஏவுகணைகளை விற்றுள்ளது அப்பிராந்தியத்தில் ஸ்திரமின்மையை ஏற்படுத்திவிடும்.

இப்படி அமெரிக்க அமைச்சர் சொன்னார். (எ)

### அமெரிக்க நீதி அமைச்சர் அறிவிப்பு

# கென்னடிகிங்மரணங்களில் வெளியார் சம்பந்தமில்லை

வாஷிங்டன், செப், 8
முன்னாள் ஜனாதிபதி ஜோன் கென்னடி, மனித உரிமை இயக்கத் தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் ஆகியோரைக் கொலை செய்ததில் வேறு சக்திகள் ஈடுபடவில்லை என்று அமெரிக்க நீதி அமைச்சு முடிவு செய்துள்ளது.

1963 இல் ஜனாதிபதியாக இருந்தபோது ஜோன் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுட்டதாகக் கூறப்படும் ஒஸ்வால்ட் என்பவரை கிரே என்பவர் பின்னர் சுட்டுக் கொன்றார்

1973 இல் மார்ட்டின் லூதர் கிங்கும் இதே மாதிரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

இரண்டு தலைவர்களும் தனிப்பட்ட முறையில் சுட்டுக் கொல்லப்படவில்லை; ஒரு குழு அவர்களைக் கொல்லச் சதி செய்தது என்று தெரிவிக்கப்பட்டபுகார்களைத் தொடர்ந்து அமெரிக்க நீதி அமைச்சு கடந்த பத்தாண்டுகளாக விசாரணை நடத்திக் கடந்த ஆண்டு ஒரு முடிவுக்கு வந்தது.

இக் கொலைகளில் வெளிச் சக்திகளோ, சதி முயற்சிகளோ இடம்பெறவில்லை என்று நீதி அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

இக் கொலைகள் பற்றி மேலும் விசாரணை நடத்தப்படமாட்டாது என்றும் நீதி அமைச்சு மேலும் அறிவித்து உள்ளது. (எ)

# ஜெ அணி இராமச்சந்திரன் மீது தாக்குதல்; ஜா அணி எம்.எல்.ஏ. தாமரைக்கனி கைது!

சென்னை, செப் 9
ஜெயலலிதா அணிப் பிரமுகரான முன்னாள் அமைச்சர் சாத்தூர் இராமச்சந்திரன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பந்தமாக ஜானகி அணியில் முன்னாள் எம்.எல்.ஏ தாமரைக்கனியும் மற்றும் ஐந்து பேரும் கைது செய்யப்பட்டனர்.

மார்பு வலி என்று முறையிட்டதன் பேரில் தாமரைக்கனி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஏனையோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

ஜெயலலிதா அணியைச் சேர்ந்த சாத்தூர் இராமச்சந்திரன் அரிவாள் வெட்டுக்கும் அசிட் திராவக வீச்சுக்கும் இலக்கானர்

கடந்த திங்கட்கிழமை காலை சாத்தூரில் இச்சம்பவம் இடம்பெற்றது.

எம் ஜி ஆர் தலைமையிலான அமைச்சரவையில் அமைச்சராக பணிபுரிந்த இவர் அ தி மு க. பிளவு பட்டபோது ஜெயலலிதா அணியில் சேர்ந்தார்.

ஜெயலலிதா அணி பிளவுபட்டபோது ஜெயலலிதாவுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்தார்; நாவலர் அணியை கடுமையாக தாக்கிப் பேசி வந்தார்.

நேற்று திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு வெளியே வந்தபோது முதலில் இவர் மீது அசிட் வீசப்பட்டது. பின்னர் அரிவாளால் வெட்டப்பட்டார்.

உடல் முழுவதும் காயங்களுடன் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர். ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டதாக அறிவிக்கப்பட்டது

தாக்குதலை நடத்தியவர்களில் ஒருவர் என்று கருதப்படுபவரை ஊர் மக்கள் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். (எ)

# ஜவான்கள் பணம் கொடுக்க முற்பட்டபோது சூடு விழுந்தது

## பண்டத்தரிப்புச் சம்பவத்தில் காயம் அடைந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், செப்9
கடையில துணிகளை வாங்கிய பின்பு ஜவான்கள் அதற்கான பணத்தைக் கொடுக்க முற்பட்டனர். அப்பொழுது திடீர் என்று அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

பண்டத்தரிப்பில் புதன்கிழமை நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் சின்னத்துரை இராசலிங்கம் (வயது 33) இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சம்பவம் நடப்பதற்கு 15 நிமிடங்களுக்கு முன் இரண்டு ஜவான்களும் எனது கடைக்கு துணி வாங்க வந்திருந்தனர்.

அவர்கள் இருவரும் தனியாகத்தான் வந்திருந்தனர்.

ஐநூறு ரூபா பெறுமதியான துணிகளைக் கொள்வனவு செய்து விட்டு அதற்கான பணத்தைத் தருவதற்காக எனது மேசை அருகே வந்தனர்.

அவர்கள் பணத்தை எண்ணிக் கொண்டிருந்த பொழுது திடீரெனச் சூடுகள் விழுந்தன.

எனது தோள் மூட்டிலும் ஒரு சூடு விழுந்தது. ஜவான்கள் இருவரும் கீழ விழுந்தனர்.

எனக்கு சூடு விழுந்த கையோடு நான் கடைக்கு வெளியே ஓடி வந்து விட்டேன்.

பின்னர் எனது கடைக்கு முன்னுள்ள மற்றொரு கடைக்காரரின் உதவியுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டேன்.

சூடுபட்ட ஜவான்கள் இருவரும் இறந்து விட்டனர் என்று பின்னர் அறிந்தேன்.

இவ்வாறு அவர் ஆஸ்பத்திரியில் வைத்துத் தெரிவித்தார். (இ-10)

## நல்லை ஆதீனத்தில் விசேஷ நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் செப் 9
நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு நல்லைதிருஞான சம்பந்தர் ஆதீனத்தில் விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன

தேர்த் திருவிழாவான இன்றுகாலை 8 மணிக்கு நவாலி சைவ வளர்ச்சி மன்றத்தினரின் முருக நாமபஜனையும்,–

9 மணிமுதல் சிவவை. நித்தியானந்தசர்மாவின் கதாப் பிரசங்கமும், அதைத் தொடர்ந்து கூட்டுப்பண்ணிசை நிகழ்ச்சியும்நடைபெறும்.

11 மணிக்கு செல்வன் ஞானவரதன் பிச்சையப்பாவின் புல்லாங்குழல் கச்சேரி இடம் பெறும்.

நிழ்ச்சிக்கு திரு எஸ். சபாரத்தினம், திரு. எஸ் கேசவமூர்த்தி, திரு சண்முகராஜா ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாக இருப்பர்.

இன்றைய தினம் நடைபெறும் அன்னதானத்துக்கு முருகன் அன்பர்களிடம் ஆதரவு தருமாறு நல்லை ஆதீனம் கோருகிறது. (இ-சி)

## நினைவு தினமும் நினைவுவெளியீடும்

யாழ்ப்பாணம், செப்9
யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவராக கடமை ஆற்றிய அமரர் இணுவில் தி சி சண்முகலிங்கம் நினைவுதினம் நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையில் (மங்கையர்க்கரசி வித்தியாலயம்) இன்று மாலை 3 00 மணிக்கு நடைபெறும். நினைவு வெளியீடு ஒன்றும் இன்று வெளியிடப்பட உள்ளது. (இ)

## கதாப்பிரசங்கம்

நல்லூர் தீர்த்தத் திருவிழா அன்று அஷ்டலக்ஷுமி தினத்தாள் கலண்டர் நிறுவனத்தின் ஆதரவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் காலை 12 க்குநல்லை ஆதீன ஆதி முதல்வர் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளின்பிரதமசீடன் தமிழ் மணி சுப. கணேசசுந்தரன் அவர்களால் "கை கொடுத்த கந்தன்" என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நடைபெறும்

## நூற்றுண்டு விழா சிறப்பிதழ் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செப், 9
சைவ பரிபாலன சபையின் இந்து சாதன நூற்றுண்டு விழா சிறப்பிதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி (ஞாயிறு) நடைபெறவுள்ளது.

[illegible] அச்சகத்தில் அன்று காலை 10·30 மணிக்கு [illegible] விழா ஆரம்பமாகும். (ஓ)

## மூக்குக்கண்ணாடி யாருடையது?

யாழ்ப்பாணம், செப். 9
ஒரு மூக்குக் கண்ணாடி கூட்டுடன் கண்டு எடுக்கப்பட்டு உதயன் விளம்பரப்பணிமனை இலக்கம் 15 இரண்டாம்ஒழுங்கை மின்சார வீதியில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (இ)

## சோமஸ்கந்தா நினைவுநாளும் பரிசளிப்புவிழாவும்

யாழ்ப்பாணம், செப்9
புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி நிறுவியவர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நளை சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கொத்தணி அதிபர் திரு. நா. கணேசபிள்ளை வைபவத்துக்கு தலைமை வகிப்பார்.

யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் பிரதம விருந்தினராகவும் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் சிறப்புவிருந்தினராகவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

திருமதி புஷ்பவதி சபாநாயகம் பரிசில்களை வழங்குவார். (இ)

### பதற்றம் பீதி

# திருமலை நகர மக்கள் அரை மணி நேரம் பட்டபாடு

திருகோணமலை, செப் 9
கடந்த சனிக்கிழமை மாலை 6-30 க்கும் 7 மணிக்கும் இடையில் திருமலை நகரம் முழுவதும் ஒரு வித பீதியும் பதற்றமும் நிலவியது.

காரணம் இதுதான்: 6 35 மணியளவில் கடற்படைத் தளத்திலிருந்து அடுத்தடுத்து இரண்டு பிரமாண்டமான வெடிச்சத்தங்கள் கேட்டன. 2 நிமிடங்களுக்குப் பின்னர் மூன்றாவது வெடிச்சத்தமும் கேட்டது.

அத்தோடு தொடர்ச்சியாக இடைவிடாது கடற்படைத் தளத்திலிருந்து 'சைரன்' ஓசையும் எழுப்பப்பட்டது.

இந்த வெடிச் சத்தங்கள் நகரம் முழுவதும் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதேவேளை 'கண் பேட்டிலிருந்தும் வெடிச் சத்தங்கள் கேட்டன. இதனை அடுத்து கடற்கரைப் பிரதேசமான உள்துறைமுக வீதி, உவர் மலைப்பகுதி ஆகிய பகுதிகளில் சென்றிக்கு நின்ற இந்தியப் படையினரும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

வெடிச் சத்தங்கள் கேட்டதும் வேலைத்தளங்களிலும், பாதைகளிலும் கடற்கரை ஆகிய இடங்களிலும் நின்ற மக்கள் ஓட்டமும் நடையுமாக தங்கள் வீடுகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

அவசர அவசரமாக சைக்கிள்களில் ஓடிச் சென்றதால் சிலர் முட்டி மோதினர். மோட்டார் சைக்கிள்களில் சென்றவர்கள் கூட பல இடங்களில் முட்டி மோத வேண்டிய நிலை ஏற்பட்டது

இவ்வாறு 7 மணிக்கு முன்னர் தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட வேண்டுமென்று ஓடிக் கொண்டிருந்த மக்களை சந்திக்குச் சந்தி சென்றியில நின்ற இந்தியப் படையினர் கண்டபடி தாக்கவும் முற்பட்டனர்க மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மதகுரு ஒருவர் கூட மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்.

இவ்வளவுக்கும் கார

(6ம்பக்கம் பார்க்க)

ஞாயிறன்று

# மண்வெட்டி, விவசாய உபகரணங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 9
இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மயிலிட்டி கிராமச் சங்க எல்லைக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பின்வரும் இடங்களில் மண்வெட்டிகளையும் வேறு சில விவசாய உபகரணங்களையும் இலவசமாக விநியோகிக்கவிருக்கிறது.

காலை 9 மணிக்கு ஊறன்குணை கிராம முன்னேற்றச் சங்க மண்டபம்.

10 மணிக்கு சன்மார்க்க சபா மண்டபம் குரும்பசிட்டி.

11 மணிக்கு வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

12 மணிக்கு பலாலி கிராம முன்னேற்றச் சங்க மண்டபம்.

1 மணிக்கு மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம்.

2 மணிக்கு வீமன்காமம் மகா வித்தியாலயம்.

இந்த உபகரணங்களை மல்லாகம் கிராம முன்னேற்றசங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் வழங்குவார். (இ)

### மத்திய கிழக்குப் பிரச்சினை:

# றேகன் தனிப்பட்ட முயற்சி

வாஷிங்டன், செப். 8
தனது பதவிக் காலம் முடியும் முன்னர் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு எப்படியாவது தீர்வு கண்டுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் அமெரிக்க அதிபர் றேகன் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிப் பேச்சுக்களை இஸ்ரவேல், எகிப்து வெளியுறவு அமைச்சர்களுடன நடத்த அதிபர் றேகன் திட்டமிட்டிருக்கிறார்.

ஐ நா. பொதுச் சபையின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வரும்போது தன்னைச் சந்திக்கும் படி அதிபர் றேகன் வெளியுறவு அமைச்சர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் தேர்த்திருவிழாவில்

அண்ணா கோப்பி மற்றும் அண்ணா தயாரிப்புக்களை வாங்கி பெறுமதிவாய்ந்த பரிசுப் பொருள்களை இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# உதயன்

09 - 09 - 1988 வெள்ளிக்கிழமை

அருந்துங்கள்
அண்ணா கோப்பி

அண்ணா தயாரிப்புக்களின் வெற்றுப் பக்கெட்டுக்களை நல்லூர் விளம்பர நிலையத்தில் கொடுத்து எவர்சில்வர் தேறே, எவர் சில்வர் ரம்ளர், முருகன் ஸ்ரிக்கர் முருகன் அர்ச்சனை மலர் ஆகியவற்றை இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணம்

## திறந்தவெளிப் பல்கலைக்கழகத்துக்கு ஆய்வுகூட வசதிகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 9

யாழ் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன.

தற்போது இந்த வசதிகள் இல்லாத காரணத்தால் விஞ்ஞான பட்டப் படிப்பை மேற்கொள்ளும்மாணவர்கள் ஆய்வுகூடப் பயிற்சிகளுக்காக கொழும்பு செல்ல வேண்டி இருக்கிறது.

புதிய ஆய்வுகூட வசதிகள் கிடைத்ததும் மாணவர்கள் இங்கேயே அந்தப் பயிற்சிகளைப் பெற முடியும்.

யாழ். திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தில் தற்போது விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இல்லாத காரணத்தால் பி. எஸ். ஸி. விஞ்ஞான பட்டப்படிப்பைமேற்கொள்ளும் மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டிஇருக்கிறது.

சம்பந்தப்பட்ட பட்டதாரி மாணவர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் இரசாயனம், பௌதிகவியல், தாவரவியல் ஆகிய துறைகளுக்கான விஞ்ஞான ஆய்வு கூடங்கள் அமைக்கப்படும்.

இதற்காக கட்டடங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. தேவையான உபகரணங்கள் விரைவில் கிடைத்துவிடும்.

விரைவில் எமதுமாணவர்களுக்கு நவீன விஞ்ஞான ஆய்வுகூடங்கள் கிடைத்துவிடும்


இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

[ஒ-ஐ]

### நாளைய சஞ்சீவியில்

★ அண்ணாவைக் கோபம் கொள்ள வைத்த தம்பியின் சிரிப்பு— கம்பராமாயணத்தில் ஒரு காட்சி
★ ''புதுக் கவிதை''யில் குறுந்தொகை— வேலணையூர் தாஸின் முயற்சி
★ தாரத்தைக் காப்பாற்றிய தாலி— வில்வம் பசுபதியின் சிறுகதை
★ நாடுகளிடையே நல்லுறவை வளர்க்கும் 'பலூன்' சக்கரவர்த்தி
★ ஆவது பெண்ணால்— அழிவதும் பெண்ணாலா? —வாரியார் புது விளக்கம்
★ அண்ணாவின் கொள்கைக்கு இன்று ஏற்பட்டுள்ள சோதனை— தமிழக அரசியல்
★ வாழ்ந்து காட்டியவர் மகாகவி
★ போலந்து நாட்டில் தொழிலாளர் புரட்சி— உலக உலா
★ சுருக்செழுத்துக் கலையில் வெற்றி காண விரும்புபவர்களுக்கு சில வழிமுறைகள்
★ மற்றும் வழமையான அம்சங்களுடன்

### 90-ம் நாள் நினைவஞ்சலி



**கலியுகன் (ஈவினை)**

தாயகத்தில் : 29-8-1969
தியாகத்தில் : 9-6-1988

எங்கள் மண்ணின்
மைந்தன் இவன்
மாற்றான் ஆதிக்கத்தில்
எங்கள் மண்
அவலப் பட்டபோது
கையில் கருவிஏந்தி
களம் புகுந்தான்.
நேருக்குநேர் மோதவில்லை
ஊருக்குள்ளே ஒளிந்திருந்து
இவன் முதுகில் குத்தினரே
களத்தில்.........
இவன் சிந்தியது குருதியல்ல,
ஈழமாதாவின் நெற்றியில்
இட்ட குங்குமம்.
நாம் சிந்துவது கண்ணீர் அல்ல,
நாளைய விடியலுக்கான
காணிக்கை.
உன் கனவுகள் கலையலாம் — ஆனால்
உன்நினைவோ எம்மனத்தை விட்டகலாது.

(6192) — நண்பர்கள்

மரண அத்தாட்சிச் சான்றிதழ்

## போலிப் படிவங்கள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 9

மரண அத்தாட்சிச் சான்றிதழுக்குரிய பெரும் எண்ணிக்கையான போலிப் படிவங்களை அமைதிப்படையினர் நேற்று யாழ்ப்பாணத்தில் கைப்பற்றினர்.

தொடர் இலக்கங்கள் பொறிக்கப்பட்டும், பிறப்பு இறப்புப் பதிவாளரின் றபர் ஸ்டாம்ப் பொறிக்கப்பட்டும் படிவங்கள் பார்ப்பதற்கு உண்மையானவை போல் தயாரிக்கப்பட்டிருந்தன.

கைப்பற்றப்பட்ட போலிப் படிவங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

எவரும் விரும்பியவாறு அதனை நிரப்பி பொய்த் தகவலை உண்மையாக்கும் விதத்தில் அவை பணத்துக்கு விற்கப்பட்டதாக அறியவந்தது.

போலிப் படிவங்கள் குறித்து பொதுமக்கள் கவனமாக இருக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

மாவட்டப் பதிவாளர் திரு. எஸ் இராசையாவின் போலிக் கையொப்பத்தில் தவறு இருப்பதாகவும் சொல்லப்பட்டது. (அ-10)

## யாழ். மாநகராட்சிமன்ற பண்ணிசைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் செப். 9

யாழ மாநகராட்சி மன்றம் வருடாந்தம் நடாத்தி வரும் பண்ணிசைப் போட்டி இவ் வருடமும் யாழ் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு;

**மேற் பிரிவு**

மி, யசோதா, பருத்தித்துறை, 1 ஆம் இடம் சி. சர்வலோகேஸ்வரி, கொழும்புத்துறை, 2 ஆம் இடம். வ. இராமேஸ்வரன், இளவாலை. 3 ஆம் இடம் தி. மோகன் மாவிட்டபுரம், 4 ஆம் இடம். மு. ஜெயகௌரி அளவெட்டி 5 ஆம் இடம்

**கீழ்ப் பிரிவு**

ச. நளினி, சிவபதி, தெல்லிப்பளை, 1 ஆம் இடம் சி. பகிரதன், பன்னாலை, தெல்லிப்பளை 2 ஆம் இடம். இ. குகானந்தன், அரசடி வீதி, யாழ்ப்பாணம். 3 ஆம் இடம். மு. சுபவினோதி கலட்டி, யாழ்ப்பாணம். 4 ஆம் இடம். சி, சம்சானந்தி, திருநெல்வேலி 5 ஆம் இடம்.

போட்டியில் வெற்றி பெற்றோருக்கு நாளை (சனிக்கிழமை) காலை 10 00 மணிக்கு நல்லூர் தேற்கு வீதியில் அமைந்துள்ள சுகாதார கலுவலகத்தில் வைத்து பரிசில்கள் வழங்கப்படும்

யாழ் மாநகர ஆணையாளர் திரு சி வீ கே சிவஞானம் பரிசில்களை வழங்குவார் (ஒ)

### வானொலியில் ஸ்ரீவள்ளி

வடமராட்சி, செப் 9

அல்வாயூர்க் கவிஞர் நாடக மன்றத்தாரின் தயாரிப்பான ''ஸ்ரீவள்ளி'' நாடக நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணிக்கு இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படவுள்ளது.

நடிக நாதமணி செல்லையா விவேகானந்தன் நடிக்கும் புராண இசை நாடகம் இதுவாகும் (ஒ-160)

### கந்த ஷஷ்டிக் கைநூல் இலவசம்

யாழ்ப்பாணம், செப்9

நல்லூர்க் கந்தன் இரதோற்சவத்தை முன்னிட்டு இன்று மெய்கண்டான் நிறுவனத்தினர் ''கந்தஷஷ்டிக் கவசம்'' என்னும் நூலொன்றை இலவசமாக விநியோகிக்கவுள்ளனர். (ஒ-10)

### மின் வலு அதிகரிப்பால் பாதிப்பு

குருநகர், செப் 9

ஆனைக்கோட்டை, உயரப்புலம் பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட திடீர் மின் வலு அதிகரிப்பால் பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான உபகரணங்கள் பழுதடைந்தன.

உயரப்புலம், அடைக்கலநாயகி ஆலய உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மேற்படி மின் வலு அதிகரிப்பு ஏற்பட்டதால் ஆலயத்திலுள்ள பெறுமதிவாய்ந்த உபகரணங்களும் பழுதடைந்தன. (ஒ-51)

## மரண அறிவித்தல்கள்

### திரு. செல்லர் இராசதுரை

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியைச் சேர்ந்த திரு. செல்லர் இராசதுரை 5-9-88 திங்கட்கிழமை மாலை காலமானார் அன்னார் காலஞ்சென்ற கணேஸ்வரி (தங்கமணி)யின் அன்புக் கணவரும், லோகேஸ்வரன் (இலங்கைத்துறைமுக அதிகாரசபை, கொழும்பு). புவனேஸ்வரன், இராஜேஸ்வரன், கணேஸ்வரன் (விரிவுரையாளர், தொழில் நுட்பக் கல்லூரி, சிங்கப்பூர்), காலஞ்சென்ற விஜேதினி, நகுலேஸ்வரன், பத்மினி, இராஜினி, டாக்டர் ஜெகதீஸ்வரன் (லண்டன்), இந்திரேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரங்கநாயகி, இராஜேஸ்வரி, நல்லம்மா, சாந்தினி, ஞானமாணிக்கம் (C. E. C. B.,) கொத்மலை), சச்சிதானந்தம் தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), ஆனந்தகுமார் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும், நிருபா, சொருபா, அனுஜன், திலீபன், திருவதன், தீசன், விஜேபா. சுஜிதா, கணேந்தன், சனுந்தன், சுபித்தா, சங்கீதா, விஜேஜன், சஜித்தா, அர்ச்சுனா அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். ஈமக்கிரியைகள் 10-9-88 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி, கொக்குவில்.

தகவல்: இ. லோகேஸ்வரன்

(6338)

### திரு. த. சிவக்கொழுந்தர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மயிலிட்டி தெற்கு. கட்டுவனைச் சேர்ந்த திரு. த. சிவக்கொழுந்தர் காலமாகிவிட்டார் இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும் Dr. தியாகராஜா.(U K.) தவராஜா. சிவதாசன்(U S A!).குகதாசன் .தேவராஜா திருமதி விமலாதேவி ஆகியோரின் தந்தையும் சி புவனச்சந்திரனின் (சின்னத்துரை& பிறதேர்ஸ்) மாமனாரும். காலம்சென்ற ஆ. த.சுப்பிரமணியம்,பொன்னம்மா,இராசம்மா ஆ. த. நடராஜாவின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் 10-09-88 சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் 224/14, பிறவுண் றோட். இல்லத்தில் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: எஸ். தவராஜா

(6345)

### திருமதி மங்கையற்கரசி சுப்பையா

கொக்குவில் மேற்கு வாசியும் திரு அ மு சுப்பையா (பிரபல புகையிலை வர்த்தகர்) வின் மனைவியுமாகிய திருமதி மங்கையற்கரசி 8-9-88 அன்று காலமாகிவிட்டார். கிருஷ்ணானந்தன் (இளைப்பாறிய கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஊழியரும். கல்வியங்காடு மரக்காலை உரிமையாளரும்) விரத இராசேஸ்வர முதலி (கட்டிடம், உள்ளூராட்சி திணைக்களம்) கோபாலபிள்ளை, காலஞ்சென்ற ஐ. இலகவதி, செல்வி சோதிமதி ஆகியோரின் தாயாரும் திருமதி. கி லலிதாவின் மாமியாரும், செல்வி சுகிதா (மாணவி, திருக்குடும்பக் கன்னியர்மடம்)வின் பேத்தியும், காலஞ்சென்ற செல்லத்தம்பி (விதானையார் கொக்குவில் மேற்கு)யின் கனிஷ்டபுத்திரியும், காலஞ்சென்ற அ. முதலித்தம்பியின் (சுதுமலை) மருமகளும் திரு அம்பிகைபாகன் (சோதிடர், தாவடி) காலஞ்சென்றவர்களான செ. முதலித்தம்பி; செ. வீரவாகு' செ. சின்னத்தம்பி, செ. விசுவலிங்கம், திருமதி பொ. இராசம்மா, திருமதி. மு. பராசக்தி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-9-88பி. ப. 1 30 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல் -எஸ் வி. முதலி கொக்குவில் மேற்கு

(6344)

### பூஸா...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

'அவ்றோ'விமானக் குண்டுவெடிப்பு தொடர்பாக 11 பேர் சந்தேகத்தின் பேரில் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஏழுபேர் சில தினங்களுக்கு முன்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

நடராசா விஸ்வநாத பிள்ளை நெடியகாடு (வல்வை), லோறன்ஸ் அலெக்சாண்டர் (யாழ்ப்பாணம்), எஸ். புஸ்பராசா (யாழ்ப்பாணம்) ஆகியோரே கடந்த ஏழாம் திகதி விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆவர். (ஒ-160)

### எதிர்பாராது...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டதாக அறிய வருகிறது. எனினும் இச்செய்தி ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

இதேவேளை அந்த வீதியூடாகச் சென்றுகொண்டிருந்த ஊர்வாசி ஒருவரும் கொல்லப்பட்டார்

சாவகச்சேரிக்கும் நுணாவிலுக்கும் இடையில 90 ஆம் கட்டையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

இப் பாதையூடான வாகனப் போக்குவரத்து கனம்புளியடி ஊடாக நடைபெற்றது. (ஒ-10)

### சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் செப் 9

மணிப்பாய் சந்தையடியில் நேற்று ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்

மணிதிப்பிள்ளை சுப்பிரமணியம் (வயது 46) என்பவரே கொலையுண்டவராவார்

இறந்தவரின் சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. [ஒ-10]

### வட்டக்கச்சியில் போராளி மரணம்

கடந்த ஆறுந்திகதி வட்டக்கச்சிப் பகுதியில் இந்திய அமைதிப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற நேரடி மோதலில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளி ஒருவர் மரணமானார்.

ஓட்டுமடத்தைச் சேர்ந்த லெப்ரினன்ட் சிலன் என்பவரே மரணமானவர் ஆவார்.

இதேவேளை அன்றைய தாக்குதலை அடுத்து இரண்டு கடைகளும், தொழில் ஸ்தாபனம் ஒன்றும், வீடுஒன்றும் எரிக்கப்பட்டன (ஒ-ரி-10)

### புதுக்குடியிருப்பு...,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது. இந்நிலை நீங்க அமைதிப் படையினர் அங்கிருந்து வெளியேற வேண்டும்என்று கோரும் மகஜர் ஒன்றை ஊர்வலமாகச்சென்று கையளிக்க மாணவர் சம்மேளனத்தினர் விரும்பினர்.

ஆனால் இரண்டு தடவைகள் முயன்றும் அமைதிப் படையினர் அனுமதி மறுத்துவிட்டனர்.

பிரதமர் ராஜீவ் காந்திக்கு விலாசமிடப்பட்ட அந்த மகஜர்களை எப்படியும் ஊர்வலமாகச் சென்று கையளிப்பதென ஆண்கள், பெண்கள், மாணவர்கள் என்று சுமார் நாலாயிரம் பேர் திங்களன்று கூடி பிரதான வீதியூடாக ஊர்வலம் சென்றனர். ஊர்வலம் இந்திய அமைதிப் படை முகாமை அண்மித்ததும் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

எனினும் தடையை மீறி ஊர்வலம் முன்னேறிச்சென்றது. அப்போது படையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர். தடியடிப் பிரயோகமும் இடம்பெற்றது. அதில் பலரும் காயம் அடைந்தனர்.

எனினும் மக்கள் மனம் தளரவில்லை. துணிச்சலுடன் முன்னேறிச் சென்றனர். மகஜர்களை பிரதமருக்கு அனுப்பி வைக்கும்படி அமைதிப் படை அதிகாரிகளிடம் கையளித்தனர்.

மகஜர்கள் கையளிக்கப்பட்ட பின்னர் அமைதிப்படை அதிகாரி, பிரசைகள் குழு, அன்னையர் முன்னணி, மாணவர் சம்மேளனம் ஆகியவற்றின்பிரதிநிதிகளுடனும், கிராமசேவகர், ஆசிரியர்களுடனும் 30 நிமிட நேரம் உரையாடினார். தமது சிபார்சோடு மகஜர்களைப் பிரதமர் ராஜீவுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறினார்.

அதன்பின்னர் ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர். (ஒ-150)

### திருமலை நகர...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் கடற்படை தளத்தில் பயிற்சி நடைபெற்றதே எனப் பின்னர் தெரியவந்தது. இந்த விடயம் இந்தியப் படையினருக்குக் கூடத் தெரியப்படுத்த வில்லையாம். அதனாலேயே அவர்களும் கடுமையாக நடந்து கொண்டனராம். (ஒ-150)

### நோர்வே...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொண்டே அவர்களுக்கு உதவவுள்ளனர்.

வீடுகளைக் கட்டுவதற்கான பொருள்களை நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும். இவற்றின் பெறுமதி சுமார் 25,000 ரூபாவாக இருக்கும். (ஒ-5)

### ஜனாதிபதி...

(1-மபக்கத் தொடர்ச்சி)

மன்றத் தேர்தலையா? ஜனாதிபதித்தேர்தலையா? என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கவே இக் கூட்டம் நடத்தப்பட்டது.

-விவாதத்தின் பின்னர் இறுதியில் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவது என்று கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

திரு. ஜெயவர்த்தனவே மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம் என்று கொழும்பு வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது (ஒ-எ)

### இருவர் கைது

கடந்த புதன்கிழமை இரவு குருநகர்ப் பகுதியில் துண்டுப்பிரசுரம்ஒட்டுவதில் ஈடுபட்டிருந்த இருவரை இந்திய அமைதிப்படையினர் கைது செய்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

### விடுதலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் விடுதலைப் புலிகளை விடுதலை செய்ய வேண்டும். இல்லை என்றால் அடுத்து இளைஞர் அணிநடத்தும் போராட்டம் வேறு விதமாகஇருக்கும்.

வேறு வழி என்றால் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வன்முறை அல்ல, தலைமைக் கழக அனுமதிபெற்று அமைதி வழி— அறவழிப்போராட்டத்தில் குதிப்போம். எங்களையே நாங்கள் அர்ப்பணிக்கவும் தயார் ஆவோம்.

இப்படி திரு.ஸ்டாலின் சொன்னார். (ஒ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 09 09 – 1988 அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Friday 9th September 1988.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## வல்வினையை சங்காரம் செய்ய ரதமேறி வருகிறான் நல்லைமுருகன்

ஆதியில் தமிழ் மன்னரது உறைவிடமாயும் யாழ்ப்பாணத்தின் தலைநகரமாயும் விளங்கியது நல்லூர். செந்தமிழ் ஓசையும், திருவும், அன்னமும் வந்தவர்க்கு அன்புடன் வழங்கும் ஓசையும், கந்தவேள் புகழினைச் சழறும் ஓசையும் திகழும் நற்பதி நல்லூர்.

இங்கே அமைந்துள்ள கந்தன் கோயில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. கலியுக வரதனும் கந்தவேள் வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருள எழுந்தருளி விளங்கும் நல்லையம்பதி ஈழத்தில் தலைசிறந்து விளங்கும் நற்பதி. இக்கோயிலை இற்றைக்கு ஏறக்குறைய 650 ஆண்டுகளுக்கு முன் சண்பகப் பெருமாள் எனும் மன்னன் நிர்மாணித்து வழிபாடாற்றி வந்தான்.

முருகா என ஓர் தரம் ஓதும் அடியார் முடிமீது இருதாள் புனைவோனே என்றபடி, இன்றும் என்றும் நல்லூர், பெருமான் பல்லாயிரக் கணக்கான பக்தகோடிகளுக்கு அருள் புரிந்து வருகின்றான். முருகா முருகா எனக் கதறிக் காவடி

மனே சாரதியாகவும் பிரணவமே சவுக்காகவும் அமைந்த தேரில் ஷண்முகப் பெருமான் மும்மலநாசம் செய்யும் மூர்த்தியாய் வரும் காட்சி மிக இனிய காட்சி.

''மாலோன் மருகனை
மன்றுடி மைந்தனை
வானவர்க்கு மேலான
தேவனை
மெஞ்ஞானதெய் த்தை
மேதினியி
சேலார் வயல் பொழிற்
செங்கோடனைச் சென்று
கண்டு தொழ
நாலாயிரம் கண்
படைத்திலனே அந்த
நான்முகனே,'

இரதோற்சவமானது ஆன்மாக்களுக்கு வந்த வினையினையும் வருகின்ற வல்வினையையும் தீர்ப்பதற்காக மும்மல நாசத்தின் பொருட்டு சங்காரத் தொழிலை மேற்கொண்டு இரதத்தில் பவனி வருதல் பஞ்சகிருத்தியங்களிலொன்றாகிய சம்ஹாரத் தொழிலைக் குறிப்பதாக இவ்விழா அமைந்துள்ளது.

### தேரடிச் சிறப்பு

நல்லூர்த் தேரடிக்கு விசேஷ சிறப்புண்டு. இங்குதான் யோகர் சுவாமிகள், செல்லப்பா

### ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்

எப்போதும். அங்கமெல்லாம் செடில் குத்தி முள்ளு மிதியடி மேல் நடந்து வருவோரும் அங்கத்தை உருட்டிப் பலகாத தூரம் உருண்டு வருவோரும், முருகன் பேரருளுக்குப் பாத்திரமாதும். விழாவே ஆவணி விழா

தந்தையே நான், நானே அவர் என்ற பேதமற்ற தன்மையில் ''நமது சக்தி ஆறுமுகன் அவனும் நாமும் பேதகமன்றும்'' சூரிய சந்திரர்களை சக்கரமாகவும் சரம், அசரம் ஆகியவை உறுப்புக்களாகவும், நான்கு வேதங்களை குதிரைகளாகவும், பிர

சுவாமிகள் இருந்து கந்தனைக் கை தொழுது சிந்தனை வயப்பட்டு முத்தி பெற்றார்கள். நல்லூர்த் தேரிலே வடம் பிடித்தால் சொர்க்கத்திலே இடம் பிடிக்கலாம். அத்துணை பெருமைவாய்ந்தது கந்தனை. ரதோற்சவம் கண்டு தரிசித்த அத்தனை பேரும் பாக்கியவான்களே.

''முருகா என ஓர் தரமோதடியார் முடிமேல் இருதாள் அருள்வோனே'' என்று அருணகிரியார் கூறுகின்றார்.

ஆதலால் முருகன் என்ற நாமம் எல்லா நாமத்திலும் தலை சிறந்திருப்பதாகும். முருகனைக் கும்பிட்டு அவன் அருள் பெறுவது எப்படி என்பதை முருக பக்தர்கள் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது முருகவழிபாட்டிற்கு இடையறாத உறுதியித்தல் வேண்டும். உறுதி இன்றிச் செய்யப்படும் வழிபாடு யாதாயினும் பேலியாக முடியும். கடல் பொங்கிவரினும் மலை குலைந்து சாயினும் வானிடிந்து வீழினும் முருகன் நம்மைக் காப்பான் என்னும் உறுதி முருக வழிபாட்டிற்கு இன்றியமையாததாகும். இவ்வுறுதியுடையார் விரும்பும் எல்லா நன்மைகளும் பெறுவர். முருகப்பெருமான், தன்னை வழிபடுவோருக்குத் தோன்றாத்துணையாயிருந்துசெய்து வரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)




நல்லையம்பதி உறையும் கந்தவேள்

## மக்களைத் தேடி இறைவன் வருநாள் ஊருக்குள் ஒற்றுமைதரும் தேர்த்திருநாள்

நல்லூரில் தேரோட்டம் காண்பதற்கு ஆண்டுதோறும் நல்லதொரு கூட்டம் கூடுகிறது.

முதன் முதலில் நமக்குத் தேரோட்டம் காண்பித்தவரே சிவபெருமான் தான். தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன் மாலி என்னும் முப்புரத்து அசுரர்களையும் அழிப்பதற்காக சிவபெருமான் பூமியைத் தேராகவும் சூரிய சந்திரர்களைச் சில்லுகளாகவும் கொண்டு மகாமேரு மலையை வில்லாகவும் வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியை அம்பாகவும் கொண்டு தேர் செலுத்தினர் என்பர் புராணகாரர்.

ஆனால் திருமூலரோ,
அப்பணி செஞ்சடை

ஆதிபுராதனன், முப்புரம் எய்தினன் என்பர் மூடர்கள், என புராணக் கதையை மறுத்து அதற்குத் தத்துவமும் கூறுகின்றார்.

''முப்புரமாவது மும்மல
காரியம்
அப்புரம் எய்தமை
ஆரறிவாரோ''

'ஊர்கூடித் தேர் இழுத்தல்' என்ற பழமொழி மிகப் புராதனமானது. அதாவது ஊரிலுள்ளவர்கள் அத்தனைபேரும் ஒற்றுமையாக ஒன்று சேரும் இடம் தேர்த் திருவிழாவாகும். நல்லூர் தேர்த்திருவிழாக் காண கொழும்பு பலை

சுவாமிகளை முதலிற் சந்தித்த இடமும் தேரடியாகும். இதனைச் சிவயோகசுவாமிகளே ஒரு பாடலிற் கூறுகின்றார்.

கருத்தில்நினைந்துருகிக்
கைகூப்புந் தொண்டர்
வருத்தமெல்லாந்
தீர்க்கும் வடிவேல் —
திருத்தலத்தில்
தேரடியிற் தேசிகனைக்
கண்டு நேசித்தேன்
ஆரடாநீ யென்றான்
அவன்

'தேருக்கு முட்டுக் கட்டை போடும்' வழக்கம் ஒன்று உண்டு. தேரைத் திருப்பவேண்டுமானால் முட்டுக் கட்டை போட்டே ஆக வேண்டும். எமது வாழ்விலும் பல முட்டுக் கட்டைகள் நேருவது உண்டு. அவையும் நமது வாழ்வைச் சீர்ப்படுத்துவதற்காகவே இறைவன் திருவருளால் ஏற்படுவன என்றே கொள்ள வேண்டும்.

### தேர்த்திருவிழா சிறப்பு

தேர்த்திருவிழா இறைவனின் ஐந்தொழில்களில் ஒன்றான அழித்தல் தொழிலைக் குறிக்குமென்பர் ஆயினும் தமிழ்நாட்டில் கோயில்தேரின் வரலாற்று வளர்ச்சியை நோக்க, அது முதலில் ஆலய வடிவிலே அமைக்கப்பட்டது என்பது தெரிய வரும். தேரின் இலக்கணத்திலிருந்து அது ஒரு சிறிய கோயில் போன்று அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

கடோப நிடதத்தில் மனிதனுடைய உடலைத் தேராகவும் உயிரைத் தேர்த் தலைவனாகவும், புலன்களைக் குதிரைகளாகவும், புத்தியைத் தேர்ப்பாகனாகவும், புலன்கள் பற்றும் விடயங்களைத் தேரோடும் வீதியாகவும் வருணிக்கும் பகுதி ஒன்று காணப்படுகின்றது.

பொதுவாக இறைவனை நாடி மக்கள் கோயிலுக்கு வருவதே வழக்கம். ஆனால், தேர்த்திருவிழாவிலே இறைவனே மக்களை நாடி வீதி வலம் வருகின்றான். கோயிலுக்குச் சென்று வழிபடாதவர்களாக மக்களின் பொருட்டு இறைவனை அவர்களின் சமீபமாகக் கொண்டு வரும் முறையிலேதான் தேர்த்திருவிழா ஆரம்பிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

தேரிலே தெய்வத்தின் உருவச்சிலையை வைத்து ஊர்வலம் வருவது மிகப் பழைய காலம் முதல் இருந்து வந்தது. கி. பி 5ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகனான பாஹியன் தான் கண்ட தேரோட்ட விழாவைப் பற்றித் தனது நூலிலே குறிப்பிட்டுள்ளான்.

தேர்த்திருவிழா என்றால் ஊர்மக்களின் உற்சாகம் கரைபுரண்டு ஓடும் வடம் பிடிக்க ஊர் மக்கள் முந்துவர். பொதுவாக ஆடவரே வடம் பிடித்து இழுப்பது வழக்கம், சில கோயில்களில் அம்மன் பவனி வரும் தேரை மகளிரே வடம் பிடித்து இழுக்கும் வழக்கமும் உண்டு. தேர்த்திருவிழா சமூக ஒற்றுமைக்கும் கூட்டுறவுக்கும், கூட்டுறவுப் பற்றுக்கும் வழிகாட்டுவது. ★

### ஆத்மஜோதி நா. முத்தையா

நாடு கீழ்மாகாணத் தமிழர் மாத்திரம் அல்ல, சிங்கப்பூர், மலேசியா நாடுகளிலிருந்தும் வருவதுண்டு.

நல்லூர்த் தேரடிக்குத் தனி ஒரு மகிமை உண்டு. யாழ்ப்பாணத்தின் ஆதி குருவாக விளங்கும் கடையிற் சுவாமிகளை, அவரது சீடரான செல்லப்பா சுவாமிகள் தனது குருநாதனாக ஏற்றுக் கொண்ட இடம் நல்லூர்த் தேரடியாகும். ஆதலால் தான் செல்லப்பா சுவாமிகளுடைய சமாதிக் கோயிலும் அந்த இடத்திலேயே இடம்பெற்றுள்ளது சிவயோகசுவாமிகள் தனது குருநாதனாக செல்லப்பா

### வீரவேல்

வீரவேல் தாரைவேல்
விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள்
திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்ற
வேல்
சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல்
உண்டே துணை!

## நாதனே! நல்லை நாதா!

கண்கண்ட தெய்வம் நீ அறுமுகா!
நல்லையுறை
இரதமேறு மயில்வாகனா!
விண்கண்ட வேலவா!
செந்தமிழ் தெய்வமே!
இரதமேறு சுப்ரமண்யா!
சண்முகா! சரவணா! பன்னிருகரத்துடன்
இரதமேறு முருகவேளே!
தண்டாயுதா! தமிழர் தம் அவலநிலை
காக்கவே
இரதமேறு வேலாயுதா!

★ ★ ★

கலியுக வரதன் நீ! காப்பதுன் கடமையே!
கடைக்கணால் பாருமையா!
கலிப்பதேயன்றி மற்றொன்றுமேயறியாத
சனங்களைப் பாருமையா!
மலிந்தது சஞ்சலம் முருகனே! முதல்வனே!
மன்பதையழிவதாமோ!
வலிதான நின்குலம் வாடாமல் நீயருள்
நாதனே! நல்லை நாதா!

ச. பொ. பாலசிங்கம்.

## பச்சை வண்ணத் திருக்கோலத்தில் பக்தி இச்சை ஊட்டும் வேலன்

தொல்லை வினை தீர்க்கும் வேலவன், நல்லை நகரிலே கோயில் கொண்டெழுந்தருளி வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈந்தருளும் கண்கண்ட தெய்வமாக விளங்குகின்றான். முருகனுக்குப் பல பெயர்கள் உள்ளன. முருகு-அன். முருகு என்றால் இளமை, அழகு எனப் பொருள்படும். அன் ஆண்பால் விகுதி— 'முருக' என்றால் வல்லினம் மெல்லினம் இடையினம் ஆகிய மூன்றும் சேர்ந்த ஒரு சொல்லாகும் பிரணவ மந்திரமே ஓம் எனப்படும் சுப்ரமண்ய மந்திரம். அ- படைத்தல், உ- காத்தல், ம்- அழித்தல் ஆகிய இம் மூன்றும் சேர்ந்ததே பிரணவம். மொழி - உடல், கொள்கை - உயிர். தமிழ் மொழியாகிய உடலில்

### நிதர்ஸன்

தொன்றுதொட்டு அமைந்து அழகு செய்கின்ற உயிர் முருகன். தமிழ் தான் முருகன். முருகன் தான் தமிழ்.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன். உலகத்தில் வாழுகின்ற மக்கள் யாவரும் முருகனை விரும்பி வழிபடுவார்கள். காரணம், கேட்ட வரம் கொடுப்பவன் முருகன். கலியுகத்திலே கண்கண்ட தெய்வம் கந்தன். நல்லைக் கந்தன் கலியுக வரதன். துன்பம் நீங்கி இன்பமாய் வாழ இம்மையிலும் மறுமையிலும் இகபர சுகந்தரும் சுப்ரமண்யர் பவைனுக்கும் அருளும் தன்மையுடையவர். தந்தைக்கு உபதேசித்ததால் 'தகப்பன் சாமி' எனவும் சிவபெருமானுக்குச் சிவகுருவாய் விளங்கியமையால் 'சிவகுருநாதன்' என்றும் முருகன் அழைக்கப்படுகின்றான். கந்தன், கடம்பன், முருகன், கார்த்திகேயன், குமரன், குகன், சரவணன், சண்முகன், ஆறுமுகன், பிரணவன், குருபரன், வேலவன், சோமஸ்கந்தன், சுப்ரமண்யன் எனப் பல்வேறு நாமங்களையுடைய முருகப் பெருமான் தம்மைச் சிந்தித்து நின்று சேவித்து வந்தித்து வழிபடும் அடியார் இடர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சந்ததமும் நின்னருளைத் தா!


நாவலர்கள் போற்றுகின்ற நல்லூரில்
வேலவனே
தேவரெலாம் வந்துதொழும்
சிற்பரனே - மேவிவரும்
சென்மவினை தீர்ப்பவனே சித்திரத்தேர்
ஏறிவந்தாய்
என்மனத்தே என்றும் இரு.

இருமா தணைபவிருமையா என்றன்
இருமா வினைதீர்க்கும் எந்தாய் — திருவாழ்
பழனமிகு நல்லூர்ப்பரனே அருள்வாய்
கழலிணையாம் ஞானக் கரும்பு!

கரும்பே இருநல்லூர்க் கந்தக் கனியே
அரும்பே றளிக்கும் அரசே — இரும்புமனப்
பந்த முடையேன் பணிந்துன் பதம்பாடச்
சந்ததமும் நின்னருளைத் தா!


அருட்கவி சீ. விநாசித்தம்பி.


கந்தனுக்கு அரோகரா ! வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா ! கந்தனுக்கு வேல் வேல்! முருகனுக்கு வேல் வேல் !



ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட்

SHABRA UNICO FINANCE LTD.



முருகன் அடியார்களுக்கு வல்வினை போக்கவல்ல நல்லூர்க் கந்தனின் அருள் என்றென்றும் கிடைப்பதாக !


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பிதழ்

தேர் ஏறி வலம் வரும் நல்லூர்க் கந்தன் எல்லோருக்கும் அருள் பாலிக்கப் பிரார்த்திக்கின்றோம்!



சுத்தமான 22 கரட் தங்கத்தில் ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

**புனிதா**


**ஜுவலறி மார்ட்**

32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Res: 23089
Sub: 24279

தேர் ஏறி வலம் வரும் நல்லூர்க் கந்தன் எல்லோர்க்கும் அருள்புரியப் பிரார்த்திக்கின்றோம்.

**N.E.I.**
**ELECTRIC WATER PUWP**

தரமான சேவைக்கும்
நீண்டகால உழைப்புக்கும்



கேட்டு வாங்குங்கள்

**நியூற்றோன் வாட்டர் பம்ஸ்**

Manufactures:-
**N. E. INDUSTRIES**
141, Stanley Road, JAFFNA.

நல்லூர்க் கந்தன் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**லோட்டஸ்**
**நைலோன் சைக்கிள் டயர்கள்**

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களுக்கு ஏக விநியோகஸ்தர்களாக யாழ்ப்பாணம், கஸ்தூரியார் றோட், 50ஆம். இலக்கத்தைச் சேர்ந்த

**M/s. E. S. பேரம்பலம் & கம்பனியை**

உடனடியாக நியமித்துள்ளோம் என்பதை பொது மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**அசோஸியேட்டட் றபர் இண்டஸ்றீஸ் லிமிட்டெட்**
நுகே றோட், பேலியாகொட.

# நற்கதி தரும் நல்லூரான்

## தேர் ஏறி வந்து அருளும் நாள்

சிவபிரான் முன்னர் திரிபுர தகனத்திற்காக பூமியாகிய தேரிற் சென்றார் என்பது புராணம். ஆறுமுகப் பெருமானும் தமது மனோவேகப் பொற்றேரில் சென்று மாயை, கன்மம், ஆணவம் என்பவற்றின் உருவங்களாக விளங்கிய தாரகன், சிங்கன், சூரபன்மன் ஆகியோர்களைக் கிளைகளோடு சங்கரித்துத் தேவர்களைச் சிறை மீட்டார் என்பது கந்த புராணநிகழ்வு. இயற்கை வனப்பும் எழிலும் நிரம்பிய குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகப்பெருமான் இளமை அழகு, மணம், தெய்வ நலம், எல்லாம் ஒருங்கே அமையப்பெற்று நிகரற்ற அழகனாக விளங்குகின்றான். முருகப்பெருமானுடைய ஊர்தியாகிய மயிலும் தனியழகு வாய்ந்தது. திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் முருகனைக் கண்டு தொழுவதற்கு நான்முகன் நாலாயிரம் கண்களைப் படைக்கவில்லையே என அவர் கூறுவதிலிருந்து முருகனுடைய அழகின் மகிமை புலனாகின்றது. பக்தர்களுக்கும் அடியவர்களுக்கும் முருகப் பெருமான் அழகனு

க் காட்சியளிப்பதில் வியப்பில்லை ஆறுபடை வர்களாகிய சூரபன்ம

அழகுக்கு உவமையாக எவரையும் கூற முடியாது என்று கூறி முருக



னும், அவனுடைய சகோதரர்களும் முருகனுடைய தெய்வீக அழ

னுடைய தெவிட்டாத அழகில் ஈடுபட்டு அவனைத் துதித்து பக்தனாகி

**திருமதி காவேரி யோகநாதன்**

கைக் கண்டு மகிழ்ந்தனர்.

### கலைக் கோயில்

முருகப்பெருமானின்

வாழவிரும்பினர். சரித்திரப் பிரசித்தியும், தொன்மையும் வாய்ந்த நல்லைநகரில் கோயில்

கொண்ட கலியுகவரதன் தமிழ்மக்களின் தனிப் பெருந்தெய்வம். அழகிய கலைக்கோயிலாகக் காட்சியளிக்கும் நல்லூர் ஆலயம் அமைந்த இடம் ஒரு புனிதமான பிரதேசமாகும். இங்கு ஞானிகள் பலர் நடமாடி இறையருள் பெற்றுள்ளனர். சித்தர்களும், பக்தர்களும் நல்லூரான் கருணையை நாடி அங்கு கூடுவார்கள் கடையிற் சுவாமிகள் அங்கு நடமாடி அருள் பெற்று மகிழ்ந்த நிலையில் ஒரு சித்தர் பரம்பரையை உருவாக்கியுள்ளார்.

### தேர்த்திருவிழாவின் சிறப்பு

ஓர் ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்களில் தேர்த்திருவிழா மிகச் சிறப்பானது. தேரும், தேரோடும் வீதியும், தேரடியும் புனிதமானவை. நல்லூர்த்தேரடியில் தவம், ஜெப, தியானம், என்பவற்றில் ஈடுபட்டவர்கள் செல்லப்பா சுவாமிகளும், சிவயோக சுவாமிகளும் ஆவர். செல்லப்பாச் சுவாமிகளை நல்லூர்த்தேரடியில் யோகர் சுவாமிகள் கண்டு தரிசி

(4 ஆம் பக்கம் பார்க்க)

வள்ளி தெய்வானையுடன் வெள்ளிமயிலேறித் தேரேறும் நல்லூர்க் கந்தனின் அருள் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுடைய பலவினைகளைத் தீர்த்து, கருணை மழை பொழியக் கரம் கூப்பி வணங்கி நிற்கும்:

**'புஸ்பா அன் கோ'**

All Ceylon Transport Agent
102, Manipay Road.
Tile Merchant,
154, K. K. S. Road.
Main Stockist for Lankem
128, Manipay Road.
New Phaarmed Distributor
128, Manipay Road, Jaffna.

கீழ்வரும் கம்பனிகளின் அதிகாரம் பெற்ற வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:

WARNER LAMBERT LANKA (PVT) LTD.
HEMAS (DRUGS) LTD.
FARNELL CEYLON LTD.
MACKWOODS LTD.
LANKAMEDICAL (IMPORTS) LTD.

தேரேறி வரும் தேவ சேனாதிபதி அருள் பெற வாழ்த்துகின்றோம்.

கட்டடங்கள் கட்டுபவர்களுக்கு

**ஓர் வரப்பிரசாதம்**

தரமான சிமெந்துக்கலவையில் எம்மால் இயந்திரம் மூலம் தயாரிக்கப்பட்டு நன்றாகப் பதனிடப்பட்ட



4'' X 8'' X 16''   6'' X 8'' X 16''

★ அளவுள்ள கல்லுகள் எம்மிடம் உள்ளன. இக்கல்லுகளைப் பாவிப்பதனால் பூச்சுவேலை செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது.
★ மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ளவும்:

**Buildmart Enterprises**
Manufacturing & Marketing of
"Master" Cement Concrete,
Hollow Bricks.
No. 72, MARTIN ROAD,
JAFFNA.

With the best Compliments from

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(LEADERS IN COMPUTER EDUCATION)
16, 3rd Cross Street,
Jaffna.

வினை தீர்க்கும் வேலவன் சண்முகன் திருவருள் பெற வேண்டி நிற்கும்.

புதிய வீடியோ படங்களை றெக்கோடிங் செய்து பெற்றுக் கொள்வதற்கும் தரமான படப் பிரதிகளை வாடகைக்குப் பெறவும் நாடுங்கள்

**குணம் வீடியோ சென்ரர்**
42. மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

கந்தன் எல்லோர்க்கும் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்.

**ராசி சில்க்ஸ்**

காஞ்சிபுரம், மணிப்புரி, பட்டு வேட்டி, பேபிசூட், சேட்டிங், சூட்டிங்புதியசாறிவகைகளுக்கும் எல்லா நிற, எல்லா வகையான பிளவுஸ் துணிகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்

**ராசி சில்க்ஸ்**
70, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

தேர்த்திருநாளில் நல்லூர்க் கந்தன் அருள்பெற வாழ்த்துகின்றோம்.

✶ இந்தியா யாத்திரைகளின் பயணம்
✶ கனடா பயண ஒழுங்கு
✶ இந்தியா கல்லூரி அனுமதிகள்

**சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்**

தடைப்பட்ட யாத்திரைகள் பயணம் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

முன் கூட்டியே உங்கள் பாஸ்போட்டுடனும் மூன்று படத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

கிளை:
24/1, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

தேரேறி வரும் தேவ சேனாதிபதி அருள் பெற வாழ்த்துகின்றோம்

★ உங்கள் மங்கள வைபவங்களை வீடியோப் படமாக்குவதில் ஒரு நவீன முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
★ வர்ண நிழற்படப்பிடிப்பு (Outdoor still colour photography)
★ வீடியோக் கமரா, வீடியோ டெக், T.V. ஆகியவற்றை பழுது பார்த்துக் கொள்ளவும்
★ உங்கள் கலர் படச் சுருள்களை ஒரு பிரதி 4/50 வீதம் கொழும்பில் பிரதி செய்து கொடுக்கப்படும்.

**எவர் விஷன்**
21½A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தேர்த்திருநாளில் நல்லூர்க் கந்தன் அருள் பெற வாழ்த்துகின்றோம்.

**ASANGA ENTERPRISES அசங்கா என்ரபிறைஸர்ஸ்.**

**A. வாசன்**

✶ கனடா — குறுகிய காலத்துக்குள் பிரயாணத்தை மேற்கொள்ளலாம்.
✶ புருணை — கிளீனேர்ஸ் U.S. டொலர் 200, 3 வருட ஒப்பந்தம் உணவு இருப்பிடம் இலவசம்
✶ சவூதி அரேபியா — மேசன் 500 S.R., கூலியாட்கள் 450 S.R., கம்பி வளைப்போர் 500 S.R., வீட்டுச் சாரதி 450 S.R., சுப்பமாக்கற் சேல்ஸ் மேன் 400 S.R.
✶ குவைத் — கிளீனேர்ஸ் 35 K.D.
✶ சிங்கப்பூரில்

**சிங்கப்பூரில் உடனடி வேலை வாய்ப்புக்கள்**

சிங்கப்பூரில் உள்ள Chinese Ship Yard Companyக்கு தொழிலாளர் உடன் தேவை. சம்பளம் 375 S. Dollor தங்குமிடம் இலவசம் 6 படத்துடன் All Countries Passport Photostat 2 பிரதி உடன் தொடர்வு கொள்ளவும், முற்பணம் அறவிடப்படமாட்டாது.
சிங்கப்பூரில் கண்ணியமான குடும்பத்திற்கு ஓரளவு ஆங்கில அறிவுடைய பணிப் பெண்கள் தேவை. சம்பளம் 235 S. Dollor உணவு இருப்பிட வசதி இலவசம்.
மலேசியா, புருணை வேலைவாய்ப்புகளுக்கு பதிவு செய்தவர்கள் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

32, 5 ஆம் குறுக்குத்தெரு,
(பிலிப்ஸ் நேசிங் ஹோமுக்கு அருகே), யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ்


தேர் ஏறி வலம் வரும் நல்லூர்க் கந்தன்
எல்லோருக்கும் அருள் புரிய
பிரார்த்திக்கின்றோம்.

வட இலங்கையில் தரமான தொழிற்
கல்விக்கு தலை சிறந்த நிறுவனம்

**Jaffna Technical Institute**

Stanley Road,
Jaffna.

---

தேர் ஏறி உலா வரும்
நல்லூர்க் கந்தனின் அருள்
அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் எல்லோருக்கும்
கருணை பொழிய பிரார்த்திக்கின்றோம்.

சிறந்த
சைவ உணவு வகைகளுக்கு

**கண்ணன் லொட்ஜ்**

வளாகச் சந்தி,
திருநெல்வேலி.

---

நல்லூர்க் கந்தனின் அருள் பெற்று
வாழ வாழ்த்துகின்றோம்
தரமான சேட்டிங், சூட்டிங்
சாறி வகைகள் யாவற்றையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**காவேரி சில்க்ஸ்**

48, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

---

ஈழத் தமிழ் மக்களின் துயர் துடைக்க
நல்லூர்க் கந்தன் துணை புரிய
வேண்டுகின்றோம்.

மங்கையர் மனம் கவரும்
தங்க நகைகளுக்கு

**நபீஸா ஜுவல்லேர்ஸ்**

171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

நல்லூர்க் கந்தனின் அருள் பெற்று
வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.
★ யாழ்நகரில் றேடியோ, T. V.
★ வீடியோ படக்கொப்பிகள்
★ போட்டோஸ்ரற் பிரதிகள்
யாவற்றிற்கும் தனித்துவம் வாய்ந்த
ஒரே ஸ்தாபனம்

**மினி ரேட் சென்ரர்**

J. M. C. கட்டிடம்,
3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


# தேரேறி வந்து தேறுதல் தரும்

# ஈராறு கையழகன் முருகன்

தொல்லை வினை தீர்க்கும் நல்லை முருகன் இன்றுதேரில்பவனிவரும் நல்ல நாள். நல்லையின் நாயகனுக்கு தேர்த்திருவிழாவென்றால் நாடெங்கும் விழாக்கோலம். அது மக்களுக்கெல்லாம் மறக்க முடியாத திருநாள். வாழ்வோடிணைந்தபின்னிப் பிணைந்த பொன்னாள். அழகன் முருகனின் அழகுத் திருக்கோவில் வலம் வந்து அகமும், முகமும் மலர அவனது அடியிணை மலர் தொழும் அன்பர்கள் வாழ்நாளில் இதுவரை பெறுததெல்லாம் பெற்றவர் போல் களி பொங்கக் காட்சி தருகிறார்கள். நாதமயமான ஆண்டவனை நாதத்துட்காணத்தான் போலும் ஆலய மணி ஒலிக்கின்றது ஓம் ஓம் என்று ஒலிக்கின்ற மணியோசை கேட்டவுடன் முருகா என்று அசைபோடுகிறது வாய். கோவிலையடைந்தால் வேதம் ஒலிக்கின்றது. வெவ்வினையகற்றும் தீப தரிசனம் தெரிகிறது. உள்ளே ஜெகஜோதியாய்க் காட்சி தருகிறான் முருகன். பக்தர் தம் அரகரா ஒலியும், திருப்புகழின் தெய்வீக ஓசையும் உள்ளத்தை உருக்குகிறது

## பரவசம் தரும்

அடியழிக்கும் பெண்களும், அங்கப் பிரதிட்டை செய்யும் ஆண்களும், அடியார் பாத தூளிபட்டால் நம்பிறவி நோய் தீரும் என்று வீதி வலம் வரும் அன்பரும் மங்கள வாத்தியபின் ஓசையும் எம்மைப் பரவசப்படுத்துகின்றன. மாமுருக அழகனை மங்காத அழகனைப் பார்த்துக் கொண்டிருக்கலாம், பல மணி நேரம். நினைத்துக் கொண்டிருக்கலாம், பல வருடம். பாடலாம், பல்லாயிரம் தரம்! பார்க்கப் பார்க்க அழகு சொட்டிக்கொண்டே இருக்கும் பெருமான் ஈராறு கை அழகன், இசைஞான பயில் அழகன்; கருணை வேலழகன், கமலப்பூப் போல் காலழகன்; மார்பழகன்: வள்ளி என்னும் நெஞ்சியைக் காதலித்து தெய்வத்து இளநலம் காட்டி மணந்து கொண்ட முருகன் நம்மையும் ஆட்கொள்ள வருவான்.



அவன் கருணை முகம் காட்டி கையால் தழுவித் தருணத்தில் காக்கும் தலைவன். இந்த முருகனைத்தானே இன்று சீர்மேவு நல்லையம்பதியிலே பார்க்கின்றோம். அவன் வரமளிக்கும் வள்ளல். சிருஷ்டித் தொழிலைச் செய்யும் நான்முகன் ஒருதடவை அகந்தையின் உச்சாணிக் கொப்பிலே குந்தி இருந்தான். நான்முகனின் ஆணவத்தை எப்படியாவது அடக்க வேண்டும் என எண்ணிய முருகனிடம் 'பிரணவம்' என்ற சொல்லின் பொருளைக் கேட்டான். நான்முகன் விடை தெரியாமல் திருதிருவென்று விழித்த போது அவனது தலையிலே குட்டிச் சிறையிலே வைத்தான். பின்னர் பிரணவ மந்திரப் பொருளை தம் தந்தையான சிவனுக்கு உபதேசித்து அதன்பிறகு நான்முகனைச் சிறையினின்றும் விடுவித்தான்.

முருகனது கரங்களிலே இருக்கும் வேலே அவர்களது பக்தர்களை எப்போதும் பாதுகாக்கும் ஆயுதமாகத் திகழுகின்றது. அன்னை பராசக்தியே அந்த வேலை முருகப் பெருமானுக்குக் கொடுத்தாள். அந்த வேல் ஞானவேல், சக்தி வேல். வேலுண்டு வினையில்லை. மயிலுண்டு பயமில்லை என்ற நம்பிக்கையை அது அடியார்களுக்கு எப்போதும் ஊட்டிக் கொண்டேயிருக்கின்றது. சூரசங்காரம் ஆணவத்தை அழிப்பதற்கு அறிவுஞானம் தேவை என்ற தத்துவத்தை முருகன் நமக்குப் போதிக்கின்றான். முருகன் அறிவுமயமானவன்.

## ஆணவமும் ஆறறிவும்

அதேவேளையில் சூரன் ஆணவத்தின் வடிவமாக இருந்தான். ஆணவ உருக்கொண்ட சூரனை அறிவு உருக்கொண்ட முருகப் பெருமானால் மட்டுமே அழிக்க முடிந்தது. முருகன் இல்லாத இடமே இல்லை. ஏனெனில் அவன் எல்லா இடத்திலும் இருக்கின்றான். எனினும் சிறப்பாக ஆறுபடை வீட்டில் அமர்ந்து அவன்புரியும் அதிசயங்களுக்கு எல்லை இல்லை. கந்தனுக்குப் பேதம் இல்லை. உலகிலே வாழும் மக்களுக்கிடையேயும் பேதம் வேற்றுமை பிரிவு இருக்கக் கூடாதென்ற உண்மையை உலகுக்கு எடுத்துரைக்கும் நோக்கோடுதான் மலைப்பிரதேசத்தில் வேட்டுவக் குடியிலே பிறந்த வள்ளியை முருகன் மணந்தான்.

நல்லை ஒரு புனித ஸ்தலம். எம்வாழ்விலே ஏற்பட்ட எத்துயரானாலும் ஓர்முறை வாருங்கள். சொல்லற்கரிய திருக்குமரன் அருள் தப்பாமல் கிட்டும். வேண்டியதை வேண்டியபடி அளித்தருளும் நல்லை வேலவன் இன்று தேரில் ஆரோசணித்து வந்து அருள் பாலிக்கின்ற ஆனந்தமயமான காட்சி இடம் பெறுகின்றது. புனிதமான சிந்தையுடன் பக்தி பூர்வமாக வழிபாடியற்றின் ஏன் கிடைக்காது நல்லை முருகன் அருள்? நிச்சயம் கிடைக்கும். இன்றே இப்பொழுதே அவன் அருள் நாடிச் செல்வோம்.

★

- செல்வா -


**Sky Rose**

No. 1, Hospital Road, Jaffna.
நீங்கள் விரும்பிய புதிய — பழைய
பக்திப் பாடல்களை
இசைத் தட்டுக்கள் மூலம் ஸ்ரீரியோ முறையில்
ஒலிப்பதிவு செய்து கொள்ளவும்
மற்றும்
இசைத்தட்டுக்களில் இருந்து பதிவு
செய்யப்பட்ட
✶ புதிய- பழைய பக்திப் பாடல்கள்
✶ நகைச் சுவைகள்
✶ கதை வசனங்கள்
✶ இந்தி-ஆங்கிலப் பாடல்கள்
ஆகியன பதிவு செய்த கசெட்டுகளில்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ள
யாழ்நகரில்
ஒரே ஸ்தாபனம்

**Recording By Ecalizer**

ஜெயசக்தி அம்மன் பாடல்கள்
T. M. சௌந்தரராஜன்
சக்தி மகிமை - L. R. ஈஸ்வரி
சீர்காழி லண்டன் கச்சேரி No-2

---

ஈழத் தமிழரின் துயர் துடைக்க
நல்லைக் கந்தனின் அருள்பெற
வாழ்த்துகின்றோம்.




வடமாகாண
தண்ணீருக்கு ஏற்ற
வகையில் தயாரிக்கப்
பட்ட தேயிலை

**தங்கம் தேயிலை**

ஏக விநியோகஸ்தர்கள் :

**மெடிக்கல் ஹோல்**

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

---

மயில் ஏறும் மன்னவா
எம் மனமேற இங்குவா

**A/L**

விஞ்ஞான பாடங்களுக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரே ஒரு நிறுவனம்
SCIENCE ACADEMY
JAFFNA.

---

உங்களுக்குத் தேவையான
சகல பலசரக்குப் பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

**முருகன் ஸ்ரோஸ்**

நல்லூர்

---



வண்ணத்தேரிலே வடிவேலனைக் காண வாரீர், வடம் பிடித்து இழுப்போம் வாரீர், வணங்கி அருள் பெறுவோம் வாரீர்,

**துவாரகாஸ் எலெக்ரிக்கல்ஸ்**

No. 34, K. K. S. Road, சுன்னாகம்.

தெய்வா எலெக்றிக்கல்ஸ் No. 24 K. K. S ROAD, CHUNNAKAM என்னும் எமது ஸ்தாபனம் தற்பொழுது மேற்காட்டிய முகவரியில் பெயர் மாற்றப்பட்டு இயங்கிக்கொண்டு இருப்பதை வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும் மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இவ்வளவு காலமும் எமது வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவிய அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
மின்சார உபகரணங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்!

**DHUWARAKA'S Electricals** No. 34, K.K.S. ROAD, CHUNNAKAM.

---

தொல்லை வினை தீர்க்கும் நல்லைநகர்க் கந்தனே! இல்லையெனாது எமக்கு நீ இன்னருள் புரிவாய்!

**எஸ். பி. அன்ரன் மகிழ்ச்சியுடன் அறியத்தரும் வெளிநாட்டு பயண ஒழுங்குகள்**

**★ சவூதி அரேபியா ★ மாலைதீவு ★ குவைற் ★ சிங்கப்பூர்**

போன்ற நாடுகளுக்கு துரிதகதியில் வேலைவாய்ப்பு
✶ நம்பிக்கை, நாணயம், நேர்மை, கண்ணியம் இவற்றுக்கு ஓர் முகவர் நிலையம்



**S. P. ANTON** 648 1/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

தமிழர் துயர் தீர்க்கத் தமிழ்க் கடவுளாம்
முருகன் விரைந்து வாரானோ!

✶ மங்கையர் விரும்பும் தரமான தங்க நகைகளை பல அழகான டிசைன் களில் செய்து கொடுப்பவர்கள்

✶ உங்கள் வண்ணப் படச் சுருள்களை அவற்றின் இயற்கை அழகு குன்று வண்ணம் பிறின்ற் செய்து தருபவர்கள்

★

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்.**
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வள்ளி தெய்வானையுடன் தேரேறி
வரும் நல்லூர்க் கந்தனின்
அருள் பெற வாழ்த்துகின்றோம்.

**A/L**
**கலை, விஞ்ஞான, வர்த்தக**
வகுப்புகளுக்கு யாழ்-நகரில் தலைசிறந்த
கல்வி நிறுவனம்
**நிரு ரியூசன் சென்ரர்**
கோண்டாவில்.

தேர் ஏறி உலா வரும் நல்லூர்க் கந்தனின்
அருள் பெற வாழ்த்துகின்றோம்!

யாழ்.நகரில் தரமான போட்டோஸ்ரட்
பிரதிகளை பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்:
**SHARP PHOTOSTAT**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆறுபடை வீடுகொண்ட திருமுருகா
அன்பர் குறை தீர்க்கவென்று
வருமுருகா
ஏறுமயில் ஏறிவரும் இளையோனே
உந்தன் தேர் ஏறிப் பவனிவரும்
காட்சி காண்போம் கவலை
வேண்டாம்
சாவகச்சேரியில்:
**Data Processing and Computer**
**C/o SCIENCE CENTRE**
Post Office Road
Chavakachcheri.

வினை தீர்க்கும் நல்லூர்க் கந்தா எம் மக்கள்
உன் அருள் பெற வாழ்த்துகின்றோம்.
**கலை, விஞ்ஞான, வர்த்தக**
வகுப்புக்களுக்கு யாழ் நகரில்
தனித்துவம் வாய்ந்த நிறுவனம்
**BOND INSTITUTE**
Stanley Road,
Jaffna.

வினை தீர்க்கும் நல்லூர்க் கந்தனின்
அருள் பெற வாழ்த்துகின்றோம்

**Zellers chocolates**

தரமான சொக்லேட்
வகைகளுக்கு
**சரன்கா ஏஜென்சி**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

## கருதிக் கருதிக் கவலைப் படுவோர்
## கவலைக் கடலைக் கடியும் வடிவேல்!

"காரார் குழல்பாடக் கார்வண்டு பண்பாட, ஆராத காதல் அடியரெல்லாம், சிராசச் சென்னியிலே கைகுவித்து" நல்லைக் கந்தனை மெல்ல மெல்ல உள்வதனால் பெறும் தனிப்பரமானந்தமே இன்று முருக அடியார்களின் மனதில் தேக்கி நிற்கின்றது. "எந்த மடலாலும் எழுதா இறைவடிவை சிந்தை மடலாலெழுதிச்" சேர்ப்பித்த அருள் பெற்ற மகான்களின் திருப்பாடல்களை பெய்யன்பினால் ஓத ஓத "சிறை பெருநீர்போல் சிந்தைவாய்ப் பாயும்" பரமானந்த வெள்ளப் பெருக்கை என்னென்று வியப்பது?

"அந்தநாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம் அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு வேதாந்த சித்தாந்தம் கற்றதனாலென்ன வேடிக்கைக் கதைகள் பேசினாலென்ன வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் எல்லாம் இல்லாமற்போமே" என்று உருக்குமொழியால் உத்தரவாதம் அளித்த ஆசானன கொழும்புத்துறை ஸ்ரீ யோகசுவாமிகளின் போதனையும், பசுமரத்தாணி அறைந்தாற்போல், எம்மனதில் பதிந்து விடுகிறது. இவ்வித தீவிர பக்தியினால் ஆளப்படுவோர், "நல்ல



மலரெடுத்து, நல்லூரை நாடிப்போய், நல்ல மனதோடு பணிய, நல்ல மயில் ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்" என்ற உறுதியான நம்பிக்கையுடன் அங்கே சூழ்கின்றனர்.

முருகன் அடியார் எங்கெங்கு உளரோ, அவர்களின் எண்ணமெல்லாம் இந்நாட்களில் நல்லூரில் அவர்களின் கண்ணெல்லாம் நல்லூரில், மனமெல்லாம் நல்லூரில் தான். "முன்னிய கருணையாலே" அவர்களைக் கவரும் ஓர் அற்புத கருணைத் தெய்வம் அங்கு இருப்பதையும், அங்கு திரளும் நல்லடியார் கூட்டத்தைக் காணும்போதும், அந்த நல்லைநகரே ஒரு சிவலோகமாக மாறி விட்டது போலும், பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பதில் வியப்பில்லையே.

"அஞ்சு முகம் காட்டாது ஆறுமுகம் காட்ட வந்த செஞ்சரணச் சேவடியே" சேவிக்கும் நோக்கமாய் அங்கு நண்ணும் மெய்யடியார்கள் பொன்னையும் பொருளையும், போகத்தையும் வேண்டியா அங்கு பெய்க்கின்றனர்? இல்லவே இல்லை. அங்ஙனமாயின் அவர்கள் வேண்டுவது தான் யாது என்பதை அருணகிரிநாதரின் திருப்பாடல் ஒன்றால் நுகர்வதே இன்பம் பயப்பதாகும்.

"விண் ஆள் பதமும்
விரி நீர் புடைசூழ்
மண் ஆள் பதமும்
மகிழேன். மகிழேன்,
தன் ஆர் அமுதே
சயிலப் பகையே
கண் ஆர் உன் அரும்
கனியைப் பெறினே"

என்றபடி ஞானப்பழமாய்த் திகழும் அந்த முருகக்கனியை அல்லவா பெற விழைகின்றனர்.

"காடும் மலையும் கடலும் உருளச் சாடும்" தனிவேலைத் தன்திருக்கரத்தில் உடைய செவ்வேள் அவர்கள் தூய பிரார்த்தனைக்கு இரங்கி அருளுமாப்போல், அவர்களின் விழிக்குத் துணையாக தன் திருமென்மலர்ப் பாதங்களையும், அவர்களின் மெய்மை குன்று மொழிக்குத்துணையாக 'முருகா' என்னும் நாமங்களையும், அவர்கள் முன்பு செய்த பழிக்குத் துணையாக தன் பன்னிரு தோள்களையும், பயந்த தனி வழிக்குத் துணையாக வடிவேலையும் மயூரத்தையும் பரிசாக அவர்கட்கு அளித்து நிற்கும் கந்தரலங்காரச் சிறப்பையும் அங்கு காணக்கூடியதாக இருக்கிறது.

முருகனுக்குள்ள பெருமைகளில் மிகச் சிறந்ததாக மிளிர்வது அவன் குருநாதர்களுக்கெல்லாம் உயர்ந்த குருவாக இருக்கும் தனிப்பெருமையே.

அவன் ஞானபண்டிதனாய் விளங்கும் இத்தன்மையினாலேயே அந்த நல்லைப்பதியில் மற்றைய சில ஆலயங்களில் காணப்படும் சாதி - மத பேதப் பிரச்சினைகள் அங்கு தலையெடுக்கவில்லைப் போலும். கருதிக் கருதிக் கவலைப்படுவார் கவலைக் கடலைக் கடியும் வடிவேலான அந்த நல்லூர் ஆண்டவன் முன் அனைவரும் சமமே என்ற அவனின் திருக்குறிப்பில், அனைவரும் பிணக்கின்றி வழிபடும் தனிச்சிறப்பைக் காண்கின்றோம்.

இன்றைய சூழ்நிலையில், கலியுகத்துக்கே இயல்பாயுள்ள பெரும் இன்னல்கள் பலரின் வாழ்விலும் மலைபோல் ஓங்கிநின்று அவர்களை ஒறுக்கின்றன. 'குன்றம் எறிந்ததுவும், குன்றப் போர் செய்ததுவும், அன்று அங்கு அமரர் இடர் தீர்த்ததுவும்' ஆன செல்வன் தான். எந்தவிதமான இடர்க் குன்றுகளையும் தகர்த்தெறியவல்லான் என்பதை மனதில் நன்கு துணிந்து யாவரும் முருகவழிபாட்டில் சிறப்பாய் ஈடுபட வேண்டிய அவசியத்தை உணருகின்றோம்.

சி. வே. சிவஞானப்பிரகாசம்

## நற்கதி....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

த்தார். நல்லூர்த் தேரடியில் என்குருவைக்கண்டேன்!. என்றும் தேரடியிற் தேசிகனைக்கண்டு தரிசித்தேன்' என்றும் சிவயோக சுவாமிகள் தனக்குக்கிடைத்த குருவருள் பற்றிக் கூறியுள்ளார். கரங்கூப்பிச் சிரந்தாழ்த்திக் கந்தனை வலம் வந்தால் பிறவிப்பிணி தீயிற்பட்ட பஞ்சு போல் அற்றுப் போய் விடும் என்பது ஆன்றோர்கூற்று. எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போகுமேஎன்பதுயோகர் வாக்கு, அவரே "நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்" என்றார்.

### சண்பகப் பெருமாள்

இன்று நேற்றல்ல சண்பகப்பெருமாள் என்று சொல்லப்பட்ட ஸ்ரீசங்கபோதி புவனேகபாகுபதினைந்தாம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலே நல்லூர்க்கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித்தான். என்பது சரித்திர உண்மை. கடந்த ஐநூறு வருடங்களாக் கோடானுகோடி மக்கள் இதயங்களிலே வற்றாத, முற்றாத அணி நலங்கொண்டு திகழ்கின்றான் நல்லூர்ப்பெருமான். தேரேறுவதற்கு வசந்த மண்டபத்திலிருந்துபெருமான் புறப்படுகிறார். ஆர்ப்பரித்து எழுந்து திரைகள் மோதும். சமுத்திரத்திலே செல்லும் பாய்க்கப்பலைப்போல் நல்லூர் ஆறுமுகன் பக்கங்களிலும் பின்னும், முன்னுமாக நிரம்பிய மனித சமுத்திரத்திலேயே நீந்திவந்து தேரில் ஆரோகணித்துக் கொள்கிறார்.

பக்தர்களின் ஆரவாரம் பூரித்து எழுகிறது. முன்னாலே வைத்த கண் வாங்காது அதனை அள்ளிப் பருகும் பக்தர்கள் பின்னால் அங்கப் பிரதட்சணமும், அடியழித்தலுஞ் செய்யும் அடியார்கள். ஆங்காங்கே முருகன் புகழ்பாடும் அன்பர்கள் சிந்தையிலே அவனைத்தவிர வேறு சிந்தனைகளே இல்லை. அவனுந் தன் பன்னிரு திருவிழிகளாலும் எல்லோருக்கும் அருள் பொழிகிறான். ஆயிரமாயிரம் இளஞ் செல்வங்களை நாலா புறமுஞ் செல்லவிட்டு தேரின் முன்னால் மலைபோல் விளங்கும் சிதர்த் தேங்காய்க் குவியல் போல் எம்புறப்பகைகளையெல்லாம் நொருக்கித் தள்ளுகிறான் அண்மையில் இடம்பெற்ற கலவரங்களிலெல்லாம் பெரும் தாக்குதல்களையும், அழிவுகளையும் எதிர்பார்த்து அஞ்சி, அஞ்சி வாழ்ந்தோம்.

### நல்லூரானே தஞ்சம்

நல்லூரானே தஞ்சமென நாலா திசைகளிலிருந்தும் மக்கள் கந்தப் பெருமானின் வாசலில் தஞ்சம் புகுந்தனர். கருணையுள்ள நல்லைக்கந்தன் யாரேனுக்கேனும் சிறு இடர்கூட விளைவிக்காது காத்து வந்தான். இதுவரை இடர் விளைவித்தோர், கொலைகள் புரிந்தோர்க்கெல்லாம் நல்ல முருகன் நல்ல தீர்ப்பு வழங்குவான். ★

நானிலம் போற்றும் நல்லூர் முருகா
தமிழினம் வாழத் தேரேறி வருவாய்

**ஜவுளி உலகின்**
**நவீன முன்னோடிகள்**
**ரஞ்சனாஸ்**
17, 18, 18A, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

## மாயவனின் மருகா
## முருகா குமரேசா!

ராகம்:- ஹம்சாநந்தி தாளம்:- ஆதி

பல்லவி

நாயகன் யார்தான் உள்ளார்? - எனக்கு
நாயகன் நீதான் ஐயா - முருகையா!
-(நாய......)

அனுபல்லவி

மாயவனின் மருகா! முருகா!! குமரேசா!!!
மாமயிலில் வருவாய் நல்லூர்க் குகனேசா!!
-(நாய......)

சரணம்

நாயினும் கீழாமென்னைத் தாயெனப்
- பரிந்தெடுத்துச்
சேயினும் மேலாமென்னைப் பேரன்பு
செய்தாயையா!
தீயினும் தீயேனையா தீண்டுதல்
தகுமோ ஐயா?
ஆயினும் அழகாஎன்னை அன்புடன்
அணைக்கின்றாயே!
-(நாய......)

- முருகு

**சேட்டிங், சூட்டிங், சாறி வகைகள்,**
**பட்டுப் பிடவைகள் போன்றவற்றை**
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள்
தெரிவு செய்ய வேண்டிய இடம்
**அரஸ் ரெக்ஸ்**
**நவீனசந்தை, யாழ்ப்பாணம்.**

வள்ளி மணாளா! வரம் தருவாய்
புள்ளி மயிலேறிக் காட்சி தருவாய்
**"ராஜகோபால்ஸ்"**



திருமணப் பட்டுப்
பிடவைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
வடஇலங்கையில்
பூகொட
தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

வள்ளி தெய்வானையுடன்
வலம் வரும் நல்லைக் கந்தா
உன் அருள் பெற வாழ்த்துகின்றோம்.
நாளுக்கோர் புதுமை
நாடுவது உண்மை
இவற்றை அளிப்பது தான்
**★ சீமாட்டி ★**
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

வினை தீர்க்கும் நல்லூர்க் கந்தா!
எம் மக்கள் உன் அருள் பெற
வாழ்த்துகின்றோம்.
யாழ். நகரில்
கட்லட், கேக், ஐஸ்கிறீம்
மற்றும் சிற்றுண்டிகளுக்கு சிறந்த இடம்.
**டவர் கோப்பி பார்,**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

அல்லற் பட்டு அவதியுற்ற எங்களை
அன்புடனே காத்தவனே ஆறுமுகனே!
உன் அருள் பெற வாழ்த்துகின்றோம்.
தரமான சேட்டிங், சூட்டிங்
மங்கள வைபவங்களுக்கு ஏற்ற
கூறைச்சேலை, காஞ்சிபுரம்
யாவற்றையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள
**லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்**
18, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**இராசா டீசல் என்ஜினியர்ஸ்**
எல்லாவகை டீசல் பம்புகளும்,
இன்ஜெக்ரர்களும் திருத்துவதும், சேவிஸ்
செய்வதும், உதிரிப்பாகங்களையும்
விநியோகம் செய்பவர்கள்.
180, பருத்தித்துறை வீதி,
குருநாதர் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22779

நல்லூர் எங்கள் ராச்சியம்
நம்மவர் ஆண்டதோ பூச்சியம்
ஷெல்லூர் வானமோ காச்சிடும்
சேவறக்கொடி வேலவா காத்திடும்!
சந்தையில் தாராளமாக் கிடைக்கிறது
✶ நாதன் ஸ்பெஷல் அப்பளம் ✶
50 உறைகளைச் சேகரித்து ஒப்படைத்தால்
ஒரு சில்வர் குவளை இனாம்!
**நாதன் ஸ்ரோர்ஸ்**
213 C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நல்லைப்பதி வாழ் வேல் முருகா
உன் அன்பர் குறைதீர்க்க வாமுருகா
**பரணி மருந்துச்சாலை**
458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி— 7386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ்


மணியோசை கணீர் கணீர் என
பகதர்கள் கந்தா, கதிர் வேலா எனத்
தேரேறி வந்து துயர் துடைப்பாய்

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

* தரமான, சுவையான, ஐஸ்கிறீம் வகைகள்
* சகல குளிர்பானங்களும் சிற்றுண்டி வகைகளுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்.

கிளை:

**ஷாம்பவிஸ்**
**கூல் & கோப்பி பார்,**
46, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மண்ணில் நல்லவண்ணம் வாழ
மயிலேறும் மாலோன் மருகனை
மலர்களால் அர்ச்சிப்போம்
நவநாகரிக டிசைன்களில் நகைகளைச் செய்து
மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர்கள்

**முருகன்**
**ஆபரண மஹால்**
(தரமான தங்கப்பவுண் நகை
உற்பத்தியாளர்கள்)
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்:

கலியுக வரத, கவின்மிகு தேரில் பவனிவரும்
காட்சி கண்டு அருள் பெறுவோம்

**கோல்டன்**
**ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.


## சித்திரத் தேரேறும் சிங்காரவேலன்

ஆலய உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடையும் ஆலயங்களில் நடைபெறும் தேர்த்திருவிழா தனிச்சிறப்பு வாய்ந்தது மட்டுமல்ல மக்கள் தொகையாகக் கூடி வழிபாட்டில் ஈடுபடும் ஒரு நன்னாளாகவும் அமைகிறது.

திருவிழாக் காலங்களில் பலவிதமான ஊர்திகளில் வீதி வலம் வரும் இறைவன் தேர்த்திருவிழாவன்று சித்திரத் தேரிலே பவனி வரும் காட்சி தெய்வீகமான ஒரு காட்சியாகும்.

தேரைப் பற்றிய பல செய்திகள் புராணங்களிலும், இலக்கியங்களிலும் உள. அரசர்கள் தேரிலே பவனி வந்ததாகவும், போருக்குச் சென்றதாகவும் இலக்கியம் கூறுகிறது.

ஆனால் ஆலயத்தில் உள்ள தேர், அமைப்பாலும், அழகாலும், சமய தத்துவங்களை விளக்கும் முறையாலும் நிகரற்று விளங்குகிறது. தமிழ் மக்களின் கலைத்திறனையும் முருகியல் உணர்வையும், பக்தியின் உயர்வையும் எடுத்துக்காட்டும் சின்னமாகத் தேர் அமைகிறது.

ஆலய உற்சவம் பஞ்ச கிருத்தியத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகிறது. தேர்த் திருவிழா அழித்தலைக் குறிக்கிறது. தேர்த்திருவிழாவின் தத்துவத்தை நாம் தெளிவாக உணர வேண்டும். மனுநீதிச்சோழன் பசுக்கன்றை தற்செயலாகக் கொன்ற தனது புதல்வனை தேர்க்காலில் நெரித்து இறக்கும்படி தேரை அவன்மீது செலுத்தினான். அப்பொழுது ''மண்ணவர்கண் மழை பொழிய விண்ணவர் பூமழை சொரிய' வீதிவிடங்கப் பெருமான் காட்சி கொடுத்தருளினார்.

இந் நிழ்ச்சி மூலம் மனுநீதிச்சோழன் காணக் கிடைக்காத இறைவனைக்



கண்டு அருள் பெற்றான். சூரபன்மன் முருகப்பெருமானைச்சிறுபாலன் என்று எண்ணிப்போர் தொடுத்தான். ஆறுமுகப் பெருமான் தேரிலேறி ஆறு தினங்கள் போர் செய்து அவனுடைய ஆணவத்தை அடக்கி, சேவலும், மயிலுமாக மாற அருள் புரிந்தார்.

சூரபன்மன் சேவலைக் கொடியாகவும், மயிலை ஊர்தியாகவும் எப்போதும் முருகப்பெருமானோடு இருக்கும் பெரும் பேறு பெற்றான்.

தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கிறது என்னும் போது தீவினைகளை அழித்து அருள் பாலிப்பது என்பது தெளிவு. எனவே தீவினையும், பற்றுக்களும் எம்மை விட்டு நீங்கினால் இறைவனே தேரேறி வந்து ஆலயத்திலும் வெளியேயும் கூடி நிற்கும் பக்தர்களுக்கு அருள் பாலிப்பான்.

அழகு, இளமை, தெய்வநலம், கருணை, வீரம். ஆகிய எல்லாச் சிறப்புக்களும் ஒருங்கேயமைந்த ஆறுமுகப்பெருமான் அழகிய தேரிலே பவனி வரும் காட்சியைக் கண்டு களிக்க பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவது வழக்கம். ஆலயங்களுக்கு நியமமாகச் செல்லாதவர்களும் தேர்த்திருவிழா பார்க்கச் செல்வது வழக்கம். ஒருகிராமத்தின் அல்லது ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டின் சின்னமாக தேர்த்திருவிழா விளங்குகிறது. சிவாச்சாரியார்கள், கலைஞர்கள், தொண்டர்கள், அடியார்கள் எல்லோரும் ஆற்றுகின்ற புனித டணி தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற உதவுகிறது. அந்தணர்களுடைய மந்திர ஒலியும், நாதஸ்வரக் கலைஞர்களுடைய தெய்வீக இசையும், பக்தர்களுடைய கூட்டுப் பிரார்த்தனையும், மக்களிடையே மனத்தைப் பரவசப் படுத்தி பக்தியை ஏற்படுத்துகின்றன.

வரலாற்றுப் பெருமையும், தொன்மையும், சிறப்பும் ஒருங்கே அமைந்த நல்லூர் கந்தசுவாமிதேர்த் திருவிழா இன்று கோலாகலமாக நடைபெறுகிறது. நக்கீரனுடைய துயர் தீர்த்தது அருணகிரிநாதருக்கு ஆறெழுத்து மந்திரத்தை உபதேசம் செய்து, குமரகுருபரருக்கு கவிபாடும்சக்தியை அருளி, தமிழ் மக்களின் தனிப்பெருந் தெய்வமாகக் கந்தக் கடவுள் காட்சியளிக்கிறார். சிவயோகசுவாமிகளும் அவருடைய குருநாதர் செல்லப்பா சுவாமிகளும். நடமாடிய புனித பூமியில், நாம் எல்லோரும், ஒன்றுகூடி வழிபாடு செய்வது கிடைத்தற்கரிய பேறு. தேர் செய்தவர்கள், செய்விப்பவர்கள், தேர்த்திருவிழாவைச் செய்பவர்கள், வடம் பிடித்து இழுப்பவர்கள், மற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள அடியார்கள் எல்லோரும் நற்கதியடைவார்கள் என்று நூல்கள், கூறுகின்றன. சித்திரத் தேரேறி வரும் சிங்காரவேலவனை வழிபட்டு துன்பமும். இன்னலும் நீங்கி, இன்பமும் அமைதியும் பெற்று என்றும் நம்மவர்கள் நல்வாழ்வு வாழ நாடு வளமும் நலமும் பெற அருள் பெறுவோமாக. ★

**- ஓர் அடியான் -**






**தேனினும் இனிய**
* ஐஸ்கிறீம் வகைகள்
* குளிர்பான வகைகள்

**சுவைமிகுந்த**
* சிற்றுண்டி வகைகளும்
* லிங்கம் ஸ்பெஷல் பீடாக்களும்

பெற்றுக்கொள்ள தவறாது விஜயம் செய்யுங்கள்:

**லிங்கம் கிறீம் ஹவுஸ்**
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

முத்தமிழால் வைதாரையும் நைந்துருகச்செய்யும் முருகனின் புகழ் பாடி அருள் பெறுவோம்

குறைந்த சலாரில் எண்ணெய் வடித்துப் பெற்றுக்கொள்ள

**மல்ரி-ஒயில்**
**இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்**
**OIL MILLERS**
காங்கேசன்துறை வீதி. இணுவில்
(இணுவில் ஆஸ்பத்திரி முன் புறம்)

தேவர்கள் வாழ்த்த, பக்தர்கள் போற்ற, தேரேறி வரும் கலியுக வரதனின் கருணை கிடைப்பதாக!

★ கோவில் அபிஷேகம், திருவிழாக்கள் ★ புதுமனைப் பிரவேசம் ★ திருமண விழாக்கள்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

முதலிய வைபவங்களுக்குத் தேவைப்படும்

★ சுத்தமான பசு நெய் ★ அபிஷேகத் திரவியங்கள் ★ விளைவு சூடம் ★ சாம்பிராணி ★ ஊதுபத்தி ★ வாசனைதிகள் முதலிய சகல பொருள்களும்
சந்தனம், குங்குமம் முதலியனவும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.
சவ்வரிசி, சேமியா, நெல்லிகிறஷ், பாதாம் பருப்பு, பச்சைச்சந்தனம், சித்த ஆயுர்வேத மருந்துகள் கோரோசனை, கஸ்தூரி குங்குமப்பூ. மருந்துச் சரக்குகள்
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். வைத்தியர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் வழங்கப்படும்.



**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி** (மருந்து, மருந்துச் சரக்கு வாசனைதிகள் வியாபாரம்)
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி: 22541)
160, செட்டியார் தெரு, கொழும்பு 11. (தொலைபேசி; 35825)

நல்லை நகரிலே நாடிவரும் அடியார்க்கு நல்லருள் புரியும் நாயகனே உன்னை பாடிப் பணிந்து வணங்குவோம்!



இவற்றுக்கு ஒரு முகவர் நிலையம்

**M 3 TRAVELS**
**M 3 TRAVELS**

* மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு
* துரிதகதியில் பிரயாணம்
* நம்பிக்கை, நாணயம், நேர்மை, கண்ணியம்

Sothy Lane,
College Road, K.K.S.

கிளை:
No. 1, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

THE LUMALA CYCLE
LUMALA

நல்லைக் கந்தா, கதிர்வேலவனே, உமையாள் மைந்தா, எமையாள் முருகா
தேரினிலே இன்று வந்து துயரினைப் போக்குவாய்

ஏக விநியோகஸ்தர்கள்:-

* LUMALA (லுமாலா) சைக்கிள்கள்
* EASTERN (ஈஸ்ரேன்) சைக்கிள்கள்
* RONSON (ரொன்சன்) சைக்கிள்கள்
* HERO (ஹீரோ) சைக்கிள்கள்
* ROMA (ரோமா) சைக்கிள்கள்

**இ.சுப்பிரமணியம் அன் கோ.,**
இல.8, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

கனன் (CANON) போட்டோ பிரதி சேவை

* கணப் பொழுதில் தரமான பிரதிகள்
* மின் துண்டிப்பு நேரத்திலும் தடைப்படாத சேவை
* 19. 8. 88தொடக்கம் பிரதி ஒன்றுக்கு 25% விலைக்கழிவு
* கூடுதலான பிரதிகளுக்கு மேலும் விசேட விலைக்கழிவு
* சேவை நேரம் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

**காயத்ரி கிப்ற் சென்ரர்**
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

# நாடே ஊருக்குள் திரண்டு வரும் நல்லூர் முருகனின் தேர்த் திருவிழா

**தெ. பொ. மீனாட்சி சுந்தரன்**

முருகன் தமிழ்க்கடவுள்; தமிழர் கடவுள். சிவனைக் கூறாத தொல்காப்பியர் சேயோனாகிய முருகனையே கூறுகிறார். சிவனும் முருகனாகவே தமிழருக்குக் காட்சி அளிக்கின்றான். "உலகெங்கும் மேவிய தேவாலயந்தொறும் பெருமாளே" என அருணகிரிநாதர் பாடுவது போல், கடவுள் எங்கே எங்கே எவர் எவர் வழிபட்டாலும் அக்கடவுள் தமிழ் முருகனேயாம். தமிழ்தான் முருகன் எனலாம்.

தொல்காப்பியம் கூறுவது மட்டுமா? சங்க இலக்கியம் முருகனையும், முருக வழிபாட்டையும் குறிக்கின்றன. திருமுருகாற்றுப்படை முருகனிடம் நம்மைக் கொண்டு செல்வது. இது பத்துப்பாட்டில் முதல்பாட்டு. பரிபாடல்களில் முருகனை வழிபடும் பாடல்கள் வருகின்றன. பின்னே வந்தவர் என்று கொள்ளப்பட்டாலும் பாரதம் பாடிய பெருந்தேவனார் குறுந்தொகையின் கடவுள் வாழ்த்தை முருகன் பாட்டாகவே பாடியுள்ளார். சிலப்பதிகாரம் பாடிய இளங்கோ அடிகள் தமிழர்க்கு இயல்பான சமரச நெறி கோடு சேயோன் மேய மைவரை உலகத்து வாழும் குன்றக் குறத்திப் பெண்கள்போலவே அன்போடு அகம் நெக்கு உருகி முருகனைப் பாடும் குன்றக் குரவையைப் பாடி ஆடுகின்றார்.

### பக்தி யுகத்தில்

பின்னே பக்தி யுகம் பிறந்தபோது நாயன்மார்களும், ஆழ்வார்களும் முருகனைத் தம் பாடல்களில் குறிக்கின்றார்கள். சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் முருகனைக் குறிப்பதோடு விட்டு விடாது நேர்முகமாக்கிப் பாடும் பாடல்களும் உண்டு. பதினோராம் திருமுறையில் திருமுருகாற்றுப்படை இடம் பெற்றுள்ளது. ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பாவில் முருகனைப் பற்றிய இசைப்பாக்களும் உள்ளன. பெரியபுராணத்தில் முருகநாயனார் என உயர் குலத்து நாயனாரும் வருவதால் முருகன் என்ற பெயரைச் சிறந்த பெயராக மக்களுக்கு இடுவதும் பெருவழக்காக இருந்தது என அறியலாம்.

மெய்ஞ்ஞான ஆராய்ச்சி சங்கரர் வழியும் இராமானுஜர் வழியும், மெய்கண்டார் வழியும் பரவிய பின்னர், சகலாகம பண்டிதர்கள் கோயில் வழிபாட்டை ஆகம வழியே வரையறுத்த பின்னர் முருகனை வழிபடும் கோயில் முறையும் அவனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் கௌமார சமயமும் நிலை பெற்றன. பதினோராம் நூற்றாண்டுக்குப் பிற்படாத இளம்பூரணர் குமரக்கோட்டம் என்ற சொல்லை மேற்கோள் காட்டுவதால் முருகன் கோயில்கள் காஞ்சி முதலிய இடங்களில் எழுந்து பெயர் பெற்று இருந்தல் வேண்டும்.

### வேல் வழிபாடு

அதற்குமுன், முருகனைப் பழங்காலத்தில் அவனுடைய ஞானசக்தியும் சிறந்த அடையாளமான வேலைக் கருவறையில் வைத்துக் கோயில் கட்டி வழிபட்டு வந்தார்கள். சிலப்பதிகாரம் வேற்கோட்டம் என்று சுட்டுவதால் இந்தப் பழமை விளங்கும். பின் முருகனின் பல கோலங்களைக் கருவறையில் வைத்து வழிபடும் கோயில்களும் உண்டாயின. சிவனை வழிபடுவோர் சிவனார் திருமகன் முருகன் எனக் கொண்டு முருகன் கோயிலையும் சிவன் கோயிலின் உட கோயிலாகக் கட்டி வணங்கி வந்தார்கள்.

கந்தபுராணப் பண்பாடு யாழ்ப்பாணத்தில் இன்று நிலைநிற்கின்ற தென்றால் அதனை வளர்த்திட்ட பெருமை நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களையே சாரும். கந்தபுராணத்தை வசனரூபமாகத் தொடங்கியும் மூலத்தைப் பதிப்பித்தும் அவர் ஆற்றிய தொண்டு மிக மிகப் பெரிது. கந்தபுராண நவநீதம் என்ற நூலை காசி வாசி ஸ்ரீ சி. செந்திநாதையர் இறம்பட எழுதியுள்ளார். யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் கந்தபுராணத்துக்கு நல்ல உரை எழுதி இருக்கிறார்கள். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கந்தபுராணம் தக்ஷகாண்டத்துக்கு உரை எழுதி பரிசு பெற்றார்.

### நல்லூரே வேற்கோட்டம்

ஈழநாட்டில் மற்றொரு பழைமையான மணமும் வீசும். பழங்காலத்தில முருகன் கோயில் வேற்கோட்டமாகவே விளங்கியது எனச் சிலப்பதிகாரத்தின் வழியே அறிந்தோம். அந்தப் பழைய வேற்கோட்டத்தை ஈழத்தில்தான் பெருங்கோயிலாகக் காண முடிகின்றது. நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அத்தகைய வேற்கோட்டமே.

அந்தக் கோயில் பல சிறப்புக்களை உடையது. அது வீற்றிருக்கும் ஊரின் பெயரே மிகப் பொருத்தம் உடையது. முருகப்பெரியோன் பழைய வேற்கோட்டத்தில் வீற்றிருக்கும் ஊர் நல்ல நல்லூர். "நன்று பெரிதாகும்" என்றபடி பெரியதற்கெல்லாம் பெரியதாகி சுப்பிரஹ்மணியம் வீற்றிருக்கும் நல்லூர் பழம் பெருமை மட்டுமா? தமிழையும் சைவத்தையும் ஈழத்தில் நிலைநாட்டி தமிழ்நாட்டிலும் அச்சு வகையாகவும் பேச்சுவகையாகவும் உரை நடையாகவும் வளர்த்த ஆறுமுகநாவலர் பெருமான் பிறந்த ஊரும் அந்த நல்லூர் தானே!

அவர் போற்றிய கோயிலும் அங்குள்ள கந்தசுவாமி கோயில் தானே! இந்தக் கோயில் இன்றும் ஈழநாட்டுத் தமிழ் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. கோயிலுக்குப் போக முடியாதவர்கள் போகாதவர்கள் இவர்களையும் தடுத்தாட்கொள்ள அவர்கள் வீடு தோறும் எழுந்தருளுவது போலத் திருவிழா உலா வருகின்றான் கந்தசுவாமி. அத்திருவிழாவில் தேர்த்திருவிழாவே மிகச் சிறந்தது' திருக்கோயிலே நம்முன் வருவது போல் தோன்றுகிறது அல்லவா? அத்திருவிழாவன்று நாடே அவ்வூருக்குள் திரண்டு வரும். தேங்காய்கள் மலைபோலத் திரளும். இந்த மக்களைக் கண்ட ஆண்டவன் அவர்களைப் விட்டுப் பிரியாதவன் போல ஆங்காங்கே நின்றும் பின் பைய இயங்கியும் செல்வான். ★

(செ. தனபாலசிங்கம் எழுதிய 'நல்லை நகர்ச் செவ்வேள்' என்ற நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் ஒரு பகுதி)

உ

## முருகன் தியான மாலை

அகரம்போல் உலகுக் கெல்லாம்
ஆதியாய் நின்ற சோதி
செகமெலாம் விழிக்கக் கூவுஞ்
சேவலங் கொடியாய் போற்றி!

ஆற்றினைச் சூடி நெற்றிக்
கண்ணயின், பொறிக ளாருய்த்
தோற்றியுள் ளிருள் கெடுத்த
தூயனே போற்றி போற்றி!

இன்பத்துந் துன்ப வாயும்
எனைப்புரந் தாளு கின்றாய்
நின்பத்தி யற்ற நாயேன்
நினைந்தவை தந்தாய் போற்றி!

ஈசற்குக் குருவாய் வந்து
சிவகுரு வென்று வையம்
பேசிடப் பிரண வத்தைத்
தெரிந்திடும் பெருமான் போற்றி!

உடலுறு பிணியைத் தீர்ப்பாய்
உள்ளத்துக் கவலை தீர்ப்பாய்
அடன்மயில் வேலுங் கொண்ட
ஐயனே போற்றி போற்றி!

ஊன்செறி யுடல்வனப்பில்
உள்ளத்தைப் பறிகொடுத்து
நான்கெடல் முறையோ வள்ளி
நாயகா போற்றி போற்றி!

எண்ணுதற் கரிய வின்ன
வியற்றிய சூரன் மாளப்
பண்ணிய வேலா வுன்றன்
பாதபங் கயங்கள் போற்றி!

ஏத்துவா ரிதயம் மேவி
இருந்தருள் குகனே போற்றி
கூத்தனார் தந்த வெங்கள்
கோமளக் கொழுந்தே போற்றி!

ஐம்புல வேடர் துன்பம்
அகற்றுவாய் போற்றி விண்ணோர்
தம்பெருந் தலைவா போற்றி
சங்கரன் குமரா போற்றி!

ஒருமையாய் நினைவார் துன்பம்
ஓட்டிநின் றவர்க்கு வீடு
தருமாறு முகனே போற்றி
சாம்பவி தனயா போற்றி!

ஓசையாய் ஒளியாய் நாற்றம்
ஊறுநற் சுவையாய் மேவும்
தேசிகா வள்ளி யன்பில்
திளைத்த பேரழகா போற்றி!

ஔவைசெந் தமிழைக் கேட்க
அருங்கனி மணலில் வீசும்
செவ்வேளின் பாதஞ் சென்னி
சேர்ப்பதெந் நாளோ போற்றி!

– குகன் –

## பச்சை வண்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்க்கும் தன்மையுடையவர், சிவபெருமானுக்கும் முருகனுக்கும் வித்தியாசம் வேறுபாடு இல்லை. முருகன்தான் சிவன். சிவன்தான் முருகன். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது நம் கடனாகும்.

கந்தன் கழலிணையைக் கைதொழுது வணங்கி நமஸ்கரித்துக் கரங்கூப்பி சிரம் தாழ்த்தி நிற்போர்க்கு நிச்சயம் அருள்வான். ஆறுமுகமும் அபயவரதமும் வேலும் மயிலும் வினை தீர்த்துப் பழிபோக்கும் தன்மையுடையன. தேரேறி வருகின்ற தேவசேனாதிபதி பாவங்களை அழித்து பழிபோக்கி அருள்வான். ஆறுதல் தந்து மனத் தேறுதலளித்து பாவங்களைக் கூறுதல் செய்பவன் கந்தன், நல்லைக் கந்தன் தேர் விழா காணவந்திருக்கும் அடியார் கூட்டம் புண்ணியஞ் செய்த கூட்டம். முருகன் நல்விழாப் பொலிவு காண பூர்வ ஜென்ம புண்ணியம் வேண்டும். 'செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என்பது அருணகிரியார் வாக்கு.

ஆறுமுகப் பெருமான் தேர்மீது இவர்ந்து ஆரோகணித்துத் திருவீதியுலா வருங் காட்சி காணக் கண் கோடி வேண்டும் வள்ளி தேவயானை சமேதராய் அழகிய சித்திரத்தேர் அசைந்து ஆடி இவர்ந்து வருவது அழகே தனி அழகு அது மட்டுமன்றி தேரிலிருந்து இறங்கி ஆலயஞ் சேரும் காட்சி அதைவிடச் சிறப்பானது. பச்சைமாலை, பச்சை வேட்டி, பச்சை உத்தரீயம், பச்சைத் திருவாசி, பச்சைக் குடை இப்படி எல்லாமே பச்சையாக வருகின்ற திருக்கோலம் காண்பதற்கு பக்தி இச்சையூட்டுவதாகும். ஆடி அசைந்து பக்தர் வெள்ளத்தின் நடுவே ஓடம் போல ஓங்கார மூர்த்தியாய் உலாவரும் முருகன் பக்தர்களுக்கு இல்லை யெனாது வரம் ஈந்தருள் புரிவான். ★

## வல்வினையை...

(1ம் பக்கத் தொடர்ச்சி

பேருகவி அவன் அடியாருக்குத் தெரியும் மன உறுதியால் எல்லா நன்மைகளும் முருகனிடம் பெறலாம் உறுதியென்பது அரிதாயும் எளிதாயுமிருக்கிறது உறுதிப் பேற்றுக்கு ஏட்டுக்கல்வி ஆராய்ச்சி தேவையில்லை உறுதிக்கு இன்றியமையாதது ஒன்று உண்டு அதுவே அன்பு.


தமிழரின் தனிப் பெருந் தெய்வமே!
வருவாய் தேரினிலே, தருவாய் நற் தியே

A/L
விஞ்ஞான
வகுப்புகளுக்கு
யாழ் நகரின் முன்னணி
கல்வி நிறுவனம்
NEW MASTER
B.M.C. Lane,
Jaffna.

தேர் ஏறி வரும்
நல்லூர்க் கந்தனின் அருள்பெற
வாழ்த்துகின்றோம்.

S. SINNATHURAI & BRO.
39, K. K. S. ROAD,
JAFFNA.

பின்வருவனவற்றின் வடமாகாண
ஏகவிநியோகஸ்தர்கள் :

1. B. C. C. Ltd
2. J.L. மொரிஸன்&சன்ஸ் ஜோன்ஸ் சிலோன் லிமிட்டெட்.
3. பாட்டா பாதணிகள்
4. யூனியன் கார்பைட்

(6303)

அல்பா இன்டஸ்றீஸ் லிமிட்டெட்

அல்பா உற்பத்திகள் தரமான
நிகரற்ற உள்நாட்டு உருக்கு
சாதனங்கள்
காரியாலய வீட்டுத் தேவைகளுக்கும்
பாதுகாப்பு தேவைகளுக்கும் தரமான
நிகரற்ற உள்நாட்டு சாதனங்களைத் தெரிவு
செய்ய அழைக்கிறார்கள் திருத்த வேலை
களுக்கும் பாதுகாப்பு ஒழுங்குகளுக்கும்
தொடர்பு கொள்ளுங்கள்.

திருச்செந்தூரன்
றேடிங் கம்பனி
315, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நல்லூரரான் கிருபை வேண்டி
பிரார்த்திக்கிறோம்!!

நியூ விமாகி
27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
சிலோன் செரமிக் கூட்டுத்தாபனத்தின்
வடபகுதி
ஏக விநியோகஸ்தர்கள்–
✶ உஷா குளிர்சாதனப் பெட்டிகள்
✶ மின்விசிறிகள்
✶ எஸ்லோன் பைப் வகைகள்
✶ மோட்டர் வகைகள்
(CHINA, INDIA, ENGLISH)
LANKA WALLTILES வகைகளும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் இல்லங்களுக்கு நேரில்
விநியோகம் செய்யப்படும்.

With the best Compliments from
COMPUTER PROGRAMMING IS
BASIC LANGUAGE
பயிற்சிக் காலம்; 40 days (Mon, Wed, Fri)
ஆரம்பம்: 12-09-1988
COMPUTER PROGRAMMING IN
COBOL LANGUAGE
பயிற்சிக் காலம்; 3 Months [Sat, Sun)
UNIKCO
COMPUTER CENTRE
No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபால் கந்தோர் அருகாமை)

நல்லூர்க் கந்தா! தேரேறி
வந்து காத்திடுமையா!
எஸ்ரி மெடிக்கல்ஸ்
450, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வண்ணத் தேரிலே வடிவேலனைக் காண வாரீர்! வடம் பிடித்து இழுப்போம் வாரீர்! வணங்கி அருள் பெறுவோம் வாரீர்!
Mack Travels (Pvt.) Ltd.
JAFFNA.
MACK TRAVEL for AIR TRAVEL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org